
மகாசித்தர்

# முத்தூர் அகத்தியர்

ஆய்வு நூல்



பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகத்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்**
**அவர்களின்**

# ஆசிச்செய்தி

மகாசித்தர் மூத்தூர் அகத்தியரின் வரலாற்றினை நூலாக வெளியிடுவது வரவேற்கப்படவேண்டியதாகும். தமிழ் இலக்கணம், தமிழ் இசை, மருத்துவம், மாந்திரீகம், சோதிடம், சைவசித்தாந்தம் ஆகிய பல கலைகளையும் உருவாக்கி, தமிழர்களின் பாரம்பரிய கலைகளை தமிழ் மொழியில் பல நூல்களாக அகத்தியர் எழுதியுள்ளார். இதுவரை அகத்தியரின் வரலாற்றைக் குறிப்பிடும் நூல்கள் வெளிவரவில்லை என்ற குறையை இந்நூல் நிவர்த்தி செய்கின்றது. அகத்தியர் இலங்கையின் மூத்தூரைச் சேர்ந்தவர் என்பதை தமது ஆய்வுகளினால் தெளிவுபடுத்தி அதற்கான நூல் ஆதாரங்களையும் சமர்ப்பித்த வைத்திய பேரறிஞர் பாலசுப்பிரமணியம் அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அவர் சித்த மருத்துவத்தில் பல நூல்களை எழுதியும் அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்தும், சித்த மருத்துவ கௌரவ சிறப்பு ஆலோசகராகவும் இந்நூலின் ஆசிரியராகவும் அமைந்துள்ளார். அகத்தியரின் பல்கலை தாபனம் மறு சீரமைக்கப்பட்டு திருகோணமலையில் இயங்கிவருவது சரித்திரம் மீண்டும் நிகழும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அகத்தியர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற கேள்விக்கு விடை காணாத நிலையில் இருக்கும்போது அவர் இலங்கையில் ஆற்றிய பணிகளை விரிவாக எடுத்துக் காட்டும் இந்நூல் விடையாக உள்ளது சிறப்பாகும். எல்லோருக்கும் இந்நூல் பயன்பட வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றறேன். ஆசிரியர் மேலும் பல வைத்திய நூல்களை வெளிக்கொணர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை**
**பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன்**
**அவர்களின்**

# முன்னுரை

மகாசித்தர் முத்தூர் அகத்தியர் என்னும் இவ்வாய்வு நூலின் ஆசிரியர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் சித்தமருத்துவத்துறையில் பல தலைமுறைகளாக பயிற்சியும் ஆராய்ச்சிப் புலமையும் பெற்றுவந்த பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் லங்கா சித்தாயுர்வேத மருத்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர். பின்பு வைத்தியராக சேவை புரிந்ததோடு வடகிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளராகவும் பணிபுரிந்தவர். சித்த மருத்துவத்திலும் சமூக சேவையிலும் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு ஆகிய துறைகளிலும் மிகுந்த அபிமானமும் ஈடுபாடும் கொண்டவர்.

தமிழ்ப்பண்பாட்டின் மூலகாரணவர் போன்ற விடங்கள்பற்றி நவமான சிந்தனைகள் உடையவர் அகத்திய முனிவரைப்பற்றி மருத்துவ நூல் ஏடுகள் பலவற்றில் மிகுந்த குறிப்புகள் வருகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற சில கதைகள் தனித்தன்மை கொண்டவையாகவும் மக்களிடையே வழங்கிவருவனவற்றிலிருந்து வேறுபட்டமையாகவும் உள்ளன. அகத்தியமா முனிவரைப்பற்றிக் கிடைக்கின்ற கதைகளையும் இலக்கியக் குறிப்புகளையும் தொகுத்து ஆராய்ந்து தனது சிந்தனைக்கேற்ப முடிவுகளை நூலிலே அழுத்தமாகக் கூறுகின்றார்.

அகத்திய மாமுனிவருக்கும் அரசகுலங்களுக்குமான தொடர்புகள், பண்பாட்டம்சங்களை அவர் பல்வேறு தானங்களிலே நிலைபெறச் செய்தமை மருத்துவக்கலை அபிவிருத்தியடைவதற்கு அவராற்றிய சேவைகள் சைவ மரபில் அவர் வகிக்கும் இடம் தமிழ் மொழிவிருத்திக்கு அவராற்றிய பணிகள் ஆகிய விடயங்களைப்பற்றி இந்நூலாசிரியர் தனது உறுதியான கருத்துக்களை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் தந்துள்ளார். அவரது அபிமானமும் நூற்புலமையும் சிந்தனாசக்தியும் போற்றுதற்குரியவை. முதியவர்களும் இளைஞர்களும் தெரிந்து கொள்ளவேண்டிய பல விடயங்கள் இந்நூலிலே அடங்கியுள்ளன. இந்நூல் எல்லோரும் படிக்கவேண்டிய ஒன்றாகும்.

**கலாநிதி சி. பத்மநாதன்**
**வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



# முத்தூர் அகத்தியர் ஒரு கண்ணோட்டம்

செந்தமிழ் மொழிக்கு சிறந்ததோர் இலக்கணமாகிய அகத்தியத்தைப் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே அளித்த பெருமையை அகத்தியருக்களித்து அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு என்று தமிழ்த்தாயைப் போற்றுகிறார்கள் பல அறிஞர்கள். வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் நீண்டகால ஆய்வுகளினால் அகத்தியரின் ஜென்மபூமியைப் புகழ்பெற்ற ஈழநாட்டில் இலங்கையில் கிழக்கு கரையிலுள்ள மூதூரில் என்று கூறியுள்ளார்.

இவர் வைத்தியத்துறையில் துறைபோய பேரறிஞர். பழந்தமிழ் இலக்கியங்கள், சமய இலைக்கியங்கள், மருத்துவம், சோதிடம் ஆகிய நூல்களில் ஆய்வு செய்தும், நூல்கள், கல்வெட்டுக்கள் சுவடிகள் ஆதித்தமிழரின் உலகப் பரம்பல் பற்றிய வரலாற்று ஏடுகள் முதலானவற்றின் ஆய்வுச் சிந்தனையாளராக லெமூரியா கண்டனத்தின் திராவிட நாகரிகத்தினை ஈழநாட்டு நாகரிகம் என நிறுவும் முயற்சியில் ஆசிரியர் முனைந்து நிற்கிறார்.

தமிழ்நூல்களில் அகத்தியரைப்பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை பரிபாடல் போன்ற நூல்களில் வருகின்றன. இறையனார் அகப்பெயருளுரையிலிருந்து முதற்சங்கத்தில் அகத்தியனார் என்னும் புலவர் இருந்தார் என்றும், அவரின் அகத்தியம் 21000 சூத்திரங்களாலாகியது என்றும் அறிகிறோம்.

சிவன் பார்வதி திருமணத்தின்போது பூமியைச் சமப்படுத்துவதற்காக அகத்தியரை சிவன் இங்கு அனுப்பினார். அகத்தியர் திரும்பி வந்து திருமங்கலாயில் இருந்தே திருமணக் காட்சியை கண்டுகளித்தார். திருமங்கலாய் மூதூரில் உள்ளது. அகத்தியருடைய யதாஸ்தானம் திருமங்கலாய் என்பது பெறப்படுகிறது.

புலத்தியசித்தர் வாழ்ந்த இடம் புலத்திய நகரம் எனப்பட்டது. அது பொலநறுவா என்று அழைக்கப்படுகிறது. புலத்தியரின் சகோதரி லோபா முத்திரையை அகத்தியர் திருமணம் செய்தார். அவருக்கு சித்தர் என்ற மகன் உட்பட பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. மூன்றாவது தமிழ்ப்பேரவை நடைபெற்றது தென்பொதியில் எனவும் பொதியில் முத்தூருக்கு தெற்கேயுள்ள பொத்துவில் ஆகும் என்பது நூலாசிரியர் கூற்று. மூதூர் திருக்கரசையில் அகத்தியத்தாபனம் அமைத்து பல்கலைகளையும் அகத்தியர் கற்பித்து வந்தார் எனவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாட்டின் மாலியவான் சுமாலி குபேரன் இராவணன் ஆகிய ஆதி மன்னர்களுக்கும், பாண்டிய, சோழ மன்னர்களுக்கும், சாவகம், காம்போஜம் நாட்டு மன்னர்களுக்கும் அகத்தியரே குலகுருவாக இருந்து ஆட்சி செய்வித்தார் என்றும், பதினெண் சித்தர்களுக்கு தலைவராக இருந்தவர் மகாசிததர் அகத்தியரே என்றும் முச்சங்கங்களிலும் தலைமைப் புலவராக இருந்தவரும் அகத்தியரே என்றும் கூறுகின்ற ஆசிரியர் அகத்தியர் அட்டமா சித்திகளினாலும் காயகல்பப் பிரயோகத்தினாலும் சீவ சமாதியிலிருந்தும் பல்லாண்டு வாழ்ந்தவர் என்று சாதுரியமான குறிப்பினால் எம்மை நம்பவைக்கிறார்.

லெமூரியாக் கண்டத்தின் எஞ்சிய பகுதியே நமது ஈழநாடு. இங்கிருந்தே அகத்தியர் உலகநாடுகளுக்கு சென்று திராவிடநாகரிகத்தைப் பரப்பினார். மருத்துவம் சோதிடம் சைவ சித்தாந்தம் என்பவற்றை விரிவாகக் கூறிய அகத்தியர் முத்தூர் அகத்தியர் என்பதே நூலாசிரியரின் துணிவு. முத்தூர் அகத்தியரை முன்னிலைப்படுத்தும் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிந்திப்பரியன, சிந்திப்பவர்களுக்கு ஆய்வு செய்து தூண்டுவனவுமாகிய செய்திகளால் எம்மைப பந்தித்தி நிற்கும் பெரியார். பல்லாண்டு வாழ்க. அவரது ஆய்வுகள் தொடர வாழ்த்துகிறேன்.

**ஞானசிரோமணி, பண்டிதர்.**
**மூதறிஞர். இ. வடிவேல்,**
**15, வித்தியாலய ஒழுங்கை,**
**திருக்கோணமலை.**



# பதிப்புரை

ஆய கலைகள் அறுபத்தினான்கினையும் தமிழுக்கு அளித்துப் பெருமை கொண்டவர் அகத்திய மாமுனிவர். அத்தகைய பெருமை வாய்ந்த சித்தர் வாழ்ந்தது மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கங்குவேலி (கங்கைவேலி) என்னும் போது எம்முள்ளம் உவகையால் பூரிக்கின்றது. அகத்தியனாறு, அகத்தியலிங்கம், அகத்தியதாபனம், அகத்தியதீர்த்தம், திருக்கரசைமாநகர், திருமங்கலாய் இவை எல்லாம் எம்மூராகிய மூதூர் பிரதேசத்தில் அமைந்துள்ளது நாம் செய்த தவத்தின் பயனேயாம்.

இந்த விபரங்களை அறிந்து ஆராய்ந்து ஆவண ஆதாரங்களுடன் எமக்களித்த பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களை நிச்சயம் தமிழுலகம் பாராட்டும். தமிழ் வைத்தியம், இலக்கணம், இலக்கியம், மாந்திரிகம், சைவமார்க்கம், சோதிடம், வரலாறு முதலிய பல்கலைகளும் கற்றுத்தேர்ந்து அவை சம்மந்தமாக பல நூல்களை, ஆராய்ச்சிக் கட்டுரைகளை இவர் வெளியிட்டுள்ளார். அகத்தியருடைய வழியிலே தமிழ்க்கலைகளை வளர்ப்பதில் அளப்பரிய சேவைகளை செய்து வருகிறார்.

இராசசேகரம், குலசேகரம், தமிழர், சுகாதாரம், சித்தவைத்திய பரம்பரை, மருந்து, மருத்துவமலர் முதலிய பல மருத்துவ நூல்களை எழுதி வெளியிட்டவர். வடகிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர். யாழ்ப்பாணராச்சியத்தின் பரராசசேகரப் பேரரசரின் வம்சத்தில் தோன்றியவர். பிரபு ஆறுமுகம் (பெரியபரிகாரியார்) குடும்பத்தைச் சேர்ந்தவர். தமது அறிவு அனுபவம் ஆய்வுகளின் வாயிலாக அகத்தியரின் வரலாற்று உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளார். மீண்டும் தமிழ் நாகரிகம் மறுமலர்ச்சி அடைவதற்கான ஆரம்பமே இவ் ஆய்வு நூலாகும். வரலாற்று சக்கரம் மீண்டும் சூழலத் தொடங்குகிறது.

மூதூரினதும் தமிழரினதும் வரலாற்றுப் பெருமைகளை எடுத்துக்காட்டுவதாக இந் நூல் அமைந்துள்ளது. இன்று மூதூர், ஈச்சிலம்பற்று பிரதேசங்களில் ஆதரவற்ற குழந்தைகளை காப்பாற்றி வாழ்வளிப்பதில் எங்கள் அன்னை சாரதா மகளிர் இல்லம் சேவையாற்றி வருகிறது. இந் நூல் விற்பனை மூலம் பெறப்படும் பணம் இல்லக் குழந்தைகளின் வளர்ச்சிப்பணிகளுக்காக செலவிடப்படவுள்ளது.

இவ்வில்லம் எமது திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் கடந்த 20.05.1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. இதனை நிர்வாகச் செயலாளர் திருமதி. ச. சந்திரலீலா நிர்வகித்து வருகிறார். இவர் அடங்கலாக 07 பேர் கொண்ட பெண்கள் குழுவினர் இவ்வில்லத்தை செயற்படுத்துகின்றனர்.

இவ்வில்லத்திற்கு நிரந்தர பராமரிப்பு செலவுக்கான நிதி, நிரந்தரக் கட்டிடம், சுயதொழில் உபகரணங்கள் போன்றன தேவையாக இருந்து வந்தது.

கடந்த 1999ம் ஆண்டு இலண்டன் தமிழ் அநாதை அறக்கட்டளை எனும் அமைப்பு உதவியதன் பேரில் 22 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இடவசதி பூர்த்தியாக்கப்பட்ட போதும், இவ்வில்லக் குழந்தைகளுக்கு நாளாந்தம் ஏற்படும் உணவு மற்றும் இதர செலவுகளுக்கான செலவுக்கு நிரந்தரமாக எது வித வருமானமும் இல்லை.

தற்போது 20 பெண் பிள்ளைகள் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் தொடர்ந்து வரும் யுத்த வன்செயலில் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் இவர்களுக்கான சகல கல்வி வசதிகளும் வழங்கப்படுகின்றன. புதிய கட்டிடம் அமைக்கப்பட்டதன் பின்னர் மேலும் 40 பிள்ளைகள் தங்கி நின்று கற்கக் கூடிய இடம் உள்ளது.

ஆயினும் நிரந்தர நிதி வருமானம் இல்லாமையினால் மேலும் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றது. இதனடிப்படையில் எமது மூதூரின் சிவ வரலாற்றுப் பெருமையை வெளிக் கொண்டு வரும் அதேவேளை இவ்வில்லக் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையிலே இந்நூலை பதிப்பிக்க தீர்மானித்தோம்.

எனவே இந்நூலை பெறுமதிபாராது பெற்றுக்கொள்வதன் மூலம் ஆதரவற்ற எமது இந்துக் குழந்தைகளுக்கு உதவும் பணியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். இதன் மூலம் இது போன்ற நற்பணிகளை நாம் செய்யமுடியும்.

இக்குழந்தைகளின் நல்வாழ்வுக்கு உதவுதன் மூலம் தாங்களும் புண்ணியத்தை தேடிக் கொள்ளலாம்.

இவ்வாறு உதவ விரும்புகிறவர்கள் பொருளாகவோ, பணமாகவோ, உதவலாம். பணமாக உதவ விரும்புவோர் கீழ்வரும் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கலாம்.



**Annai Saratha Girls Home**
**Bank of Ceylon No:- S/A 6313,**
**Muthur Branch,**
**Sri Lanka.**

Address:
**Annai Saratha Girls Home,**
**47, Central Road,**
**Muthur.**

எமது இப்பணிக்கு கடந்த காலங்களில் பல அன்புள்ளங்கள் முடிந்த உதவிகளை வழங்கி வந்துள்ளனர். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறும் அதேவேளை இவ்வில்லத்திற்கான கட்டிடத்திற்குரிய நிதியை வழங்கியுதவிய தமிழ் அநாதைகள் அறக்கட்டளை அமைப்பிற்க்கும் அதன் ஸ்தாபகத்தலைவர், பொன். தெய்வேந்திரம் அவர்கட்கும் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

அவ்வாறே இவ்வில்லத்தின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் இம் மண்ணின் வரலாற்றுப் பெருமையை உலகறியச் செய்யும் பொருட்டும் இந்நூலை ஆக்கித் தந்த டாக்டர். க. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

நன்றி

**என்றும் இவ்வில்லத்தின் வளர்ச்சியில் அக்கறையுள்ள**
**திரு. பொ. சற்சிவானந்தம்,**
**துணைப் பொதுச்செயலாளர்,**
**திருக்கோணமலை மாவட்ட**
**இந்து இளைஞர் பேரவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**அகர முதல எழுத்தெல்லாம்**
**ஆதி அகத்தியர் முதற்றே தமிழ்**

அகிலம் போற்றும் அகத்தியர் வரலாற்றினை எழுத அவர் திருப்பாதங்களே காப்பாகும். தமிழ் இலக்கணத்தை உலகுக்கு அளித்த அகத்தியரின் வரலாற்றினை தமிழுலகம் நினைக்க மறந்துவிட்டதா? அகத்தியரின் வரலாற்றுக் குறிப்புக்கள் பல நூல்களில் காணப்படுகின்றன. மருத்துவ இலங்கியங்களில் அதிகம் உள்ளன. கங்கைவெளி அகத்திய தாபனத்தில் ஏறத்தாழ ஐந்து மைல் நீளத்திற்கு பரவலாக இடிபாடுகள், கருங்கற்தூண்கள், செங்கற்கட்டிட சிதைவுகள் அகத்தியரின் பாதச்சுவடுகள், அகத்தியர் பயன் படுத்திய அம்மி முதலிய கருவிகள், அவர் பூசை செய்த அகத்தியலிங்கம், சிவபூசைக்கு பயன்படுத்திய சிற்றாறு, கருங்கற்களாலான படித்துறை மேடை, புதையுண்டுள்ள தூண்கள் பெருமளவில் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து வரலாற்று தடயங்களின் விபரங்களைச் சேர்த்து ஒரு ஆய்வு நூலாக உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். ஆய்வாளர்கள் மேலும் இதுபற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்பது என் பேரவா ஆகும்.

எனது ஆய்வுகள் நிறைவுபெற வழிகாட்டி, இட்டுச்சென்று காண்பித்த என் பரம்பொருளாகிய எங்கும் நிறைந்துள்ள எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவடிகளை வணங்கி ஆரம்பிக்கிறேன். இந்நூலை எழுத என்னை வேண்டிக் கொண்ட சிவஞானச்செல்வர் செ. சிவபாதசுந்தரம், ஆய்வுகளுக்கு உதவிய ஞானசிரோமணி பண்டிதர். இ. வடிவேல், அகத்திய தாபனத்தினை மீளமைப்புச் செய்த மறைந்த கௌரவ அ. தங்கத்துரை பா. உ. காப்பாளர், பலவழிகளிலும் உதவிய திரு. பெ. சூரியமூர்த்தி, ஆசியுரை வழங்கிய பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை முன்னுரை வழங்கிய பேராசிரியர் சி. பத்மநாதன், தட்டச்சிற் பொறித்து உதவிய திரு. கா. சிறிஸ்கந்தராசா, ஆய்வுகளுக்கு உதவிய திரு. வே. தவராசா அதிபர், திரு. ந. தெய்வமகன், திரு. க. சுவேந்திரன் வெளியிட்டு உதவிய திரு. பொ. சற்சிவாணந்தம், புகைப்படங்கள் உதவிய திரு. நா. கணபதிப்பிள்ளை ஆகியோருக்கும், அகத்தியதாபன கழகத்தினர். உறுப்பினர்கள், என்னை என்றும் ஆதரிக்கும் அன்பு நெஞ்சங்களுக்கும், எல்லோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அகத்திய பல்கலைத் தாபனத்தினைத் தொடர்ந்து திறமையாக இயக்கி பலகலைகளையும் உயிர்பெறச் செய்வதற்கு திருகோணமலை மாவட்ட அறிஞர்கள், கலைஞர்கள், திணைக்கள அதிகாரிகள் ஊக்கமும் ஆக்கமும் கொள்வராக சிந்தனைக்கு விருந்தாக சமர்ப்பிக்கிறேன். வாசித்து மகிழ்வீர்.

**வைத்திய பேரறிஞர். க. பாலசுப்பிரமணியம்,**
**கௌரவ பொதுச் செயலாளர்,**
**அகத்திய பல்கலைத் தாபனம்,**
**திரிகோணமலை - ஏழிட்டோன்.**



# கங்கைவெளி நாகரிகம்

தமிழிலுள்ள புலத்துறை ஒவ்வொன்றிலும் அகத்தியரை முன்னவராகக் கூறும் மரபு ஒன்று பண்டு தொட்டு இருந்து வருகின்றது. அகத்தியர் பல அருஞ் செயல்களைப் புரிந்துள்ளார் என்று புராணங்கள், இதிகாசங்கள், தமிழ் இலக்கியங்கள், சைவத் திருமுறைகள் தெரிவிக்கின்றன. அகத்தியரின் வரலாற்றுக்குறிப்புகள் பல துறைகளிலும் பல நாடுகளிலும் காணப்படுகின்றபோதிலும் எல்லாரையும் ஒருவராகவே தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. சில ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தவர்கள் ஆகையால் ஒருவராகக் கொள்வது ஏற்புடையதன்று என்று கருதுகிறார்கள். ஆனால் வெவ்வேறு அகத்தியர் என்பதற்கும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

தமிழ்ப்பேரவைகளின் அகத்தியர், முச்சங்கங்களின் அகத்தியர், முருக பக்தரான அகத்தியர், யோகம், ஞானம், இரசவாதம், வாகடம், வைத்தியம், காயகல்பம், சோதிடம், பூசை. தீட்சை, ஆரூடம், முதலியவைகளில் கூறப்படும் அகத்தியர், வாள் வில் போர்ப் பயிற்சிக் குருவாகிய அரசர்களின் குரு, சிவன் கோவில்களைக் கட்டி சைவ நெறி பரப்பிய அகத்தியர், காட்டை அழித்து ஆற்றை வெட்டி குளத்தைக் கட்டி நீர்ப்பாசனம் வேளாண்மை செய்வித்த அகத்தியர், கட்டிடங்கள் நாடு நகர நிர்மாணம் நாகரிகத்தினை உருவாக்கிய அகத்தியர் என்று அகத்தியர் பல செயற்கரிய செயல்களை செய்ததாகக் காணப்படுகின்றது. அவர் ஒருவரா அல்லது பலரா என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் தெளிவு படுத்தவேண்டும். அது வரை தமிழ் நூல்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

ஈழநாட்டில் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள், நூல்கள், வரலாற்றுச் சுவடுகள் அதிகம் காணப்படுகின்றன. இந்தியாவில் காணப்படும் தமிழரின் வரலாற்றுக் காலத்திற்கு இவை முற்பட்டவையாகும். தமிழ்ப் பேரவைக் கால நூல்களில் முத்தூர் அகத்தியர் என்று அகத்தியர் தம்மைத் தாமே அறிமுகப்படுத்தியுள்ளமையை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். அகத்தியர் ஈழத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்துள்ளார் என்பதை அவர் பணிகளாலும் நூல்களாலும் அறிய முடிகிறது. திருமங்கலாய்ச் சிவன் கோவில், அகத்தியத் தாபனம், திருக்கரசைச் சிவன் கோவில், அகத்தியத் தாபனத்துடன் இணைந்த வைத்தியசாலை திருகோணமலை வில்லூன்றி விநாயகர், பெரியகுளம், பொத்துவில், திருக்கேதீச்சரம் கண்டகிலிங்கம் ஆகியவற்றைச் சான்றாகக் கொள்ளுதல் சாலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைவெளியில் அகத்தியதாபனத்தின் இடிபாடுகள், கருங்கல்லில் பொறிக்கப்பட்ட அகத்தியரின் பாதச்சுவடுகள், கருங்கற்தூண்கள், படிக்கட்டுக்கள், செங்கற்கள், வேலைப்பாடுகள் அமைந்த கருங்கற்கள் அகத்தியலிங்கம் அமைந்துள்ள கோயிற்தலமடு சிற்றாறின் கரையிலிருந்து மாவலியாற்றங்கரைவரை ஏறத்தாழ நான்கு ஐந்து மைல்கள் வரை தொட்டம் தொட்டமாக காணப்படுகின்றன, கோயிற்றலமடு சிற்றாறின் கரையில் கருங்கற்களாலான படிகள் காணப்படுகின்றன. மேலே இருபத்தைந்து அடிதூரம் வரை கருங்கற்களால் அமைந்த பாதை காணப்படுகின்றது. பாதையின் முடிவின் அகத்தியலிங்கம் இருந்துள்ளது. தற்பொழுது சற்றுத் தள்ளிக் காணப்படுகின்றது. அவர் நித்தியம் அகத்தியலிங்கத்தில் சிவபூசை செய்து வழிபாட்டார். (பின்னரே பல்கலைத்தாபனத்தில் போதனைகளை செய்து வந்துள்ளார்) என தெரியவருகிறது. முத்தூர் என்பது இன்று மூதூர் என்று அழைக்கப்படும் திருகோணமலையிலுள்ள இடமாகும், தமிழ் கலைகள் அறுபத்திநான்கும் அகத்தியரால் போதிக்கப்பட்ட வையாகும். அகத்தியத் தாபனம் பல்கலைகளையும் போதித்து வந்துள்ளது. திருமங்கலாய் தொடங்கி முத்தூர்துறை, மாவலிவரை மாவலி ஆற்றுக்கு கிழக்கே கங்கைவெளி பரந்து காணப்பட்டது. இன்று கங்கைவேலி என்று குறுகிவிட்டது. உலகில் முதலில் நாகரீகம் தோன்றியது இங்கேதான் ஆகும்.

பதினெண் சித்தர் குழாத்தினால் அகத்தியத் தாபனத்தில் எல்லாக் கலைகளையும் தாபன ரீதியாக போதிக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் தமிழ் மொழியில் பல பலைகளையும் போதித்து வந்த பெரும் கல்வி நிறுவனம் எனலாம். அகத்தியத் தாபனம் அழிந்த பின்னரும் வழிபாட்டுத் தலமாகிய சிவலிங்கம் காட்சி அளிக்கின்றது. அகத்திய என்றால் உடல் உள சம்பந்தமானது. அகத்தியருடையது என்றும், தாபனம் என்றால் நிறுவனம் அல்லது அமைப்பு என்றும் பொருள்படும். தாபன அமைப்புக்கள் அழிந்து போக சிவலிங்கம் மட்டும் எஞ்சியிருப்பதனால் அகத்தியத் தாபனம் என்றால் சிவன் கோவில் தான் என்று தெரிவிக்கப்பட்ட கருத்து பொருத்தமற்றதாகும். அகத்தியரால் கட்டப்பட்ட பல சிவன் கோவில்களில் எந்த ஒரு ஆலயத்திற்கும் தாபனம் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. அகத்திய தாபனம் ஒரு பல்கலைகளையும் போதித்து வந்த கல்வி நிறுவனம் ஆகும் என்பதே பொருத்தமானது. அகத்தியல் அங்கு போதிக்கப்பட்டதால் அகத்திய என்ற பெயர் ஏற்பட்டு இருக்கலாம். அகத்தியரால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் அம்மி, குழவிகள் போன்ற கருவிகள் அங்கு பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன வாகடம், மருத்துவம், மாந்திரிகம், இரசவாதம், சோதிடம், தமிழ் இலக்கணம், இசை, நாடகம், நடனம், சைவசித்தாந்தம், சிற்பம், ஓவியம், வாள்பயிற்சி, நாடுநகர் நிர்மாணம், குளங்கட்டல் நீர்ப்பாசனம் அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

திருக்கரசைப் புராணம் அகத்திய தாபனம் கல்வி நிறுவனம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அதனை பின்வரும் செய்யுளால் அறியலாம்.

" இந்த வண்ண அநந்தகாலமியன்ற நன்மறை யாகமம்
புந்தி செய்து மடந்தை பங்குள புனிதர் பூசனை பண்ணியே"






அகத்திய தாபனத்தின்
வாசல் படிகள்



அகத்திய தாபனம்
வாசல் சந்திரவட்டக்கல்



அகத்திய லிங்கம்
அகத்திய தாபனம்



அகத்தியரின்
திருப்பாதங்கள்
அகத்திய தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மறையாகிய சைவ சித்தாந்தங்களையும் தமிழ் ஆகமங்களையும் கலைகளையும் மாணாக்கர்களுக்கு எடுத்துச் சொல்லியும், புலவர்களை அறிஞர்களை உருவாக்கியும், பார்வதி பங்கரான சிவனை பூசனை பண்ணியும் இவ்வாறு முடிவில்லாமல் மிக நீண்டகாலம் சென்றதாகும். திருக்கரசைப் புராணம், திருமங்கலாய் புராணம், தட்சணகைலாச புராணம், தட்சண கைலாசமான்மியம், கந்த புராணம், இராமாயணம் ஆகிய பழம்பெரும் நூல்களில் அகத்தியர் ஈழத்தில் வாழ்ந்த வரலாறுகள் காணப்படுகின்றன. அகத்தியரின் மனைவி லோபாமுத்திரை புலத்திய நகரில் வாழ்ந்தவர் ஆவர். இவர் புலத்திய சித்தரின் சகோதரி என்று நூல்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கு சித்தர் என்ற மகன் உட்பட பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள். சக்தர், கராம்பி, கௌசால்யர், சுமேதர், மாபு, காந்தராயணர், இந்திரவாகு, திருதஸ்வர் என்ற எட்டுக் குமாரர்களின் பெயர்கள் மச்ச புராணத்தில் காணப்படுகின்றது.

ஐராவதம் என்ற இந்திரனின் யானை சாபத்தினால் காட்டுயானையாக கங்கைவெளியில் அலைந்து திரிந்தது. ஆதிசிவன் கோவிலில் வழிபட்டு சாபவிமோசனம் பெற்றது. இதனால் இப்பதி திருக்கரசை என அழைக்கப்படுகிறது என்பதும் ஒரு வரலாறு.

லோபாமுத்திரையும் சகலகலைகளையும் கற்று தேறிய அறிஞை ஆவர். சிவவழிபாடு, முருகவழிபாடு, சூரியவழிபாடு ஆகியவற்றை அகத்தியர் தோற்றுவித்தார். அதேபோல சக்தி வழிபாட்டினை உலகுக்கு எடுத்து கூறியவர் லோபாமுத்திரை ஆவர். இராஜராஜேஸ்வரியாக அம்மனைப் பாவித்து ஒன்பது நாட்கள் செய்யும் வழிபாடுகள் தான் நவராத்திரி வழிபாடாகும். நவராத்திரி வழிபாட்டில் கால ஓட்டத்தினால் சிலமாற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன.

## இரண்டாவது தமிழ்ப் பேரவை

இரண்டாவது தமிழ்பேரவை இலங்கையின் முல்லைத்தீவில் பேராறு என்னும் ஆற்றுக்கருகில் மணிமலையில் நடைபெற்றுள்ளதை தமிழ்விடுதூது என்ற நூல் தெரிவிக்கின்றது:-

பேராற்றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றுஞ் செங்கோறிறற் செங்கோ - நேராற்றும்
பேரவையிலே நூற்பெருமக்கள் சூழ்ந்தேத்த
பாரரசு செய்த தமிழ்ப் பைந்தேவி

செங்கோன் என்ற தமிழ் மன்னன் காலத்தில் கி.மு. 16000 ஆண்டளவில் இப்பேரவை இருந்ததாக அறிஞர்கள் கருதுகிறார்கள். முத்தூர் அகத்தியரும் இக்காலத்தவராவர், முத்தூரில் வசித்தார். சக்கரன் என்ற தமிழ் மன்னன் இரண்டாவது தமிழ்ப் பேரவைக்கு தலைவனாக இருந்தான். தனியூர்ச் சேந்தன், முத்தூர் அகத்தியர், பேராற்று நெடுந்துறையன், இடைகழிச் செங்கோடன் என்போர் இச்சங்கமிருந்த



புலவரிற் சிலராவர். செங்கோன் பெற்ற போர் வெற்றிகளைப் பற்றி தனியூற்றுசேந்தன் " செங்கோன் தரைச் செலவு" என்னும் நூலை இயற்றினான். இந்நூல் முழுவதும் தாப்புலிப்பாவினால் இயற்றப்பட்டது. மன்னன் சக்கரன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. இந்நூலுக்கு முத்தூர் அகத்தியர் சிறப்புப் பாயிரம் பாடினார்:-

செங்கோன் தரைச் செலவைச் சேந்தன் தனியூரான்
துங்கன் தமிழ் தாப்புலித்ததொடரால் - அங்கிசைத்தான்
சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
அக்கரக்கோ நாமஞ்சுவோம்.

நெடுந்துறைன் பெருநூல், இடைகழிச் செங்கோடன் இயல்நூல் ஆகியவை இரண்டாவது தமிழ்பேரவை இலக்கண நூல்களாக இருந்துள்ளன. முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மணிமலை என்று கூறப்பட்ட இடம் இன்று மண்மலை என்று அழைக்கப்படுகிறது. தனியூர் என்ற சிற்றூர் தனியூற்று என்றும் குறியிடப்படுகிறது. பேராறு என்ற ஆறு இன்றும் பேராறு என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. இவைபற்றி விரிவாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அவர் தேவசித்தருக்கும் கமலம் என்ற மாதிற்கும் தோன்றினார் என காணப்படுகிறது. வேளாள குலத்திலே மார்கழி மாதம் ஆயிலிய நட்சத்திரம் மூன்றாம் பாதத்தில் முத்தூரில் பிறந்தார். அகத்தியர் வயதை யாராலும் சொல்வதற்கு முடியாது. நாலு யுகத்தினையும் கடந்த சித்தர். அவருக்கு 48 தலைமுறைகள் இருந்தது. இருபத்தியொரு தடவைகள் சமாதிக்கு சென்று பல வருடங்கள் சமாதியில் இருந்தவர் என்றும் போகர் ஏழாயிரம் என்ற நூல் தெரிவிக்கின்றது.

## மூன்றாவது தமிழ்ப் பேரவை

மூன்றாவது தமிழ் பேரவை பொதியிலில் குமரவேள் தலைமையில் தான் நடந்தது என அறியக்கிடக்கின்றது. இரண்டாவது தமிழ் பேரவையில் சாதாரண புலவராக இருந்த அகத்தியர் மூன்றாவது தமிழ் பேரவையில் முதல் புலவராக இருந்துள்ளார். வரலாற்று ஆசிரியர்கள் மூன்றாவது தமிழ் பேரவைக்காலத்தினை இற்றைக்கு 17000ஆண்டுகட்கு முன்னர் தொடங்கி 13000 ஆண்டுகள் வரை என்று கணிப்பிட்டுள்ளார்கள். குமரவேள் தலைமையில் தமிழ் பேரவை நடந்த காலத்தில் குமரவேள் முருகசாலம் என்ற மருத்துவ நூலை இயற்றினார் என்பதை பண்டிதர் க. முத்துக்கருப்பபிள்ளை குறிப்பிட்டுள்ளார். குமரம் என்ற இலக்கண நூலையும் இயற்றினார் எனலாம். அகத்தியம் என்ற 21000 பாடல்களை கொண்ட நூலை இக்காலத்திலேயே இயற்றி இருத்தல் வேண்டும். உடல், உள்ளம் இவற்றின் அமைப்பு தொழில், நோய், நீக்கம் ஆகியவை அகத்தியல் ஆகும். அகத்தியல் பற்றி கூறியதாலேயே அந்நூல் அகத்தியம் என்று அழைக்கப்பட்டது. இதன் பின்னர்தான் அவர் அகத்தியர் என அழைக்கப்பட்டார். அகத்தியம் மருத்துவ நூல் என்பதற்கு அதில் காணப்படும் ஒரு செய்யுளை பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறான வகைக்காய மெடுத்த தேக
மானிடரி லிரண்டு வகைப் பதிப்பதான
ஊறான விதமறிவாரவர் காண் முன்ன
ருத்தம பண்டிதத் தலைவருரைத் தாரிங்கு
வீரான கதை வாள் பத்திரத்தினாலு
மேயநகம் பல் கல் பாய் கல் வீட்டலுங்
கூறான யிவை யிவையே பகுத்துப்பார்க்கக்
கொள்ள வரு முறைமை யெலாங் கோடன்னரே

என்று அகத்தியர் இருபத்தோராயிரத்தில் உள்ள பாடல் மருத்துவம் பற்றியே கூறுகிறது. இந்தியாவில் நடந்த மூன்று தமிழ்ச் சங்கங்களிலும் அகத்தியம் இலக்கண நூலாக இருந்துள்ளதை இறையனார் அகப்பொருள் தெரிவிக்கின்றது. அகத்தியம் முச்சங்கங்களிலும் இயற்றப்படவில்லை. அகத்தியத்தில் இலக்கண விபரங்களும் இருந்துள்ளதை இதிலிருந்து அறியலாம். இருபத்தோராயிரம் பாடல்களும் இலக்கணச் செய்யுள்களாக இருப்பது சாத்தியமில்லை. பொதுவாக சித்தர் நூல்களில் மருத்துவம் மாந்திரீகம் சைவ சித்தாந்தம் இலக்கணம் சோதிடம் ஆகியன கலந்தே காணப்படுகின்றன.

வைர ஊசியும் மயன் வினை இரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மை செய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாமாம்.

என்னும் பேரகத்திய சூத்திரத்தினால் மருந்துக்கான மூலப் பொருட்களைப் பயன் படுத்தும் விதம் கூறப்பட்டுள்ளது. அகத்தியம் இலக்கண நூலென்று புலவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அகத்தியத்திலுள்ள நூற்றுக்கணக்கான பாடல்கள் மருத்துவ நூல்களில் இடம் பெற்றுள்ளன. அகத்தியல் பற்றிக் கூறும் நூலை மருத்துவ நூல் என்பதே பொருத்தமானதாகும்.

சிற்றகத்தியம் என்று அழைக்கப்படும் பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட மருத்துவ நூல் காணப்படுகின்றது. இதனை அகத்தியர் பன்னீராயிரம் என்றும் கூறுவர். தமிழில் உள்ள மாபெரும் இலக்கியங்களெல்லாம் மருத்துவ நூல்களேயாம் என்பதை யாழ்ப்பாண மன்னனின் பரராச சேகரம் பன்னீராயிரம், திருமூலர் எண்ணாயிரம், போகர் ஏழாயிரம் ஆகியவை வாயிலாக அறியலாம். அகத்தியர் நாலும் தெரிந்தவர்களே பண்டிதர் என்று குறிப்பிட்டுள்ளார். மருத்துவம் மாந்திரீகம் சோதிடம் இலக்கணம் ஆகிய நான்கையும் கற்றுத் தேர்ந்தவர்களே பண்டிதர்களென அழைக்கப்பட்டனர். பண்டு இதம் என்ற சொற்கள் இணைந்து பண்டிதம் ஆகியது. பண்டிதம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே பண்டிதர் என்ற சொல் பிறந்தது.

வட மொழியில் பாண்டியத்தியம் பெற்றவர்களை பண்டிற் என அவர்கள் அழைக்கின்றார்கள்.



மூன்றாவது தமிழ்ப் பேரவை நடந்த பொதியில் என்பது பொத்துவில் ஆகும். கைலாயத்திலிருந்து இமயமலை சென்ற அகத்தியர் திருமணத்தினைப் பார்க்காமலே திருப்பி திருமங்கலாய்க்கே அனுப்பப்பட்டார். திருமங்கலாயிலிருந்தும், திருக்கரசை வழிபாடு செய்த பின்னர் தென்பொதியில் சென்றார் என்று கூறப்பட்டுள்ளதால் முத்தூரிற்குத் தெற்கே உள்ள பொத்துவில் என்பதே ஏற்புடையதாகும். பொத்துவிலில் தமிழ் வளர்த்த காலத்தில் அகத்தியர் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரப் பெருமானை வழிபட்டு வந்தார்.

அகத்தியர் வரும்வழியில் விந்தையாகத் தோன்றிய புதிய மலை விந்திய மலையென்றும் புதிய மலையென்றும் அழைக்கப்பட்டது. புதிய மலை பின்னர் பொதிய மலை என மருவியது. இதனை சுவாமி சித்பவானந்தர் தமது வால்மீகி இராமாயணத்தில் அகத்தியரால் அழிக்கப்பட்ட விந்திய மலைதான் இந்தியாவில் இன்று பொதிகை மலை என்று அழைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பொதிகை மலை பற்றிய குறிப்புக்கள் இடம் பெறும் குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் பழைய தொகை நூல்களிலே அகத்தியர் செய்திகள் எதுவுமில்லை. வான்மீகி இராமாயணத்திலே ஆரண்ய காண்டத்திலே பஞ்சவடிக்கு இரண்டு யோசனையிலும், கிஷ்கிந்தா காண்டத்திலே அயோமுகத்தின் சிகரத்திலும் (குடகுமலை உச்சி) அகத்தியரின் ஆசிரமங்கள் இருந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பொதிகை மலையிலே அகத்தியர் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப் பாலது.

அகத்தியரின் சீடர்களில் ஒருவரான சிகண்டிச் சித்தர் தமிழ் பேரவைக் காலத்தில் இசை நுணுக்கம் என்ற தமிழ் இசை இலக்கண நூலினை இயற்றியுள்ளார் என்பதை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிட்டுள்ளார். சிகண்டிச் சித்தரின் வரலாறு மட்டக்களப்பின் சித்தாண்டியில் வாழ்ந்தவர் என்று தெரிய வருகிறது.

இலங்காபுரி நகரினை குபேரன் என்ற தமிழ் மன்னன் நிர்மாணிப்பதற்கு அகத்தியரே வழிகாட்டியாவார். குபேரன் அகத்தியருடைய சீடராக இருந்து தமிழ் கற்றவன் என்பதனை சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிட்டுள்ளார். தமிழையும் தமிழ்க் கலைகளையும் அவரிடம் கற்றுள்ளான். உலக நாகரிகங்களில் காலத்தால் முந்தியது கங்கைவெளி நாகரிகமாகும். இதனைத் தோற்றுவித்தவர் அகத்தியராவர். திருவிடமாகிய இலங்கையில் நிலவிய நாகரிகமே பிற்காலத்தில் உலகின் பல பாகங்களிலும் திராவிட நாகரிகமாகப் பரிணமித்தது எனலாம்.

கீரிமுகம் படைத்த ஜமதக்கினி முனிவர் குமாரனே திரணதூமாக்கினி ஆவர். ஜமதக்கினி முனிவர் பல்லாண்டுகள் கீரிமலையில் வாழ்ந்தவர். தொல்காப்பிய உரை ஆசிரியர் நச்சினார்க்கினியார் அகத்தியர் அரசர் பதினெண்மரோடும் வேளிர்களையும் பதினெண் குடிகளையும் திரணதூமாக்கினி முனிவரையும் அழைத்துவந்து தமிழ் நாட்டின் கண்ணிருந்து காடுகளை அழித்து நாடாக்கினார் என்று குறிப்பிட்டுள்ளார். இவர்களை எங்கிருந்து அழைத்து வந்தார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய விபரங்கள் அதிற் காணப்படவில்லை. அகத்தியர் முத்தூரைச் சேர்ந்தவராகையால் ஏனையோரும் ஈழநாட்டிலிருந்து தான் சென்றிருக்க வேண்டும். பதினெண் குடிகளும் வேளிர் எனப்படும் வேளாளர்களும் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் மட்டுமே காணப்படுகின்றனர். மேலும் வேறு நாடுகளிலிருந்து இவர்களை தென் இந்தியாவிற்கு அழைத்துச் சென்றிருக்க வாய்ப்பில்லை. அக்காலத்தில் உலகின் வேறொரு நாட்டிலும் திராவிடர் உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை என்பதனால் ஈழத்திலிருந்து சென்றார்கள் என்ற கூற்று ஏற்புடையதே. அகத்தியர் அழைத்து வந்த அரசர் பதினெண்மரும் பதினெண்குடிவேளிரும் தமிழரேயாவர் என்று தமிழறிஞர் நாராயண ஐயங்கார் செந்தமிழ் இதழில் தெரிவித்துள்ளார். அக்காலத்திலே ஈழம் பெருவள நாடாக இருந்ததாலேயே இந்தியாவுக்கு உணவு ஏற்றுமதி செய்தது என்பதை "ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" என்று பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போகர் கதிர்காமத்தில் முருகன் ஆலயத்தை உருவாக்கினார். அகத்திய ருடைய மாணாக்கரான போகர் கதிர்காமத்தில் இற்றைக்கு ஆயிரத்தி எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளார் என்பதை மார்ஷல் கோவிந்தன் என்ற ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இன்னொரு மாணாக்கரான கோரக்கர் சித்தர் திருகோணமலையில் வாழ்ந்து முத்தியடைந்துள்ளார் என்கிறது திருக்கோணேஸ்வரம் என்னும் நூல்.

## நாதத்திற்கு நாதன்

இராவணன் தம் ஐயர் என்றும் பாராமல் தாம் கற்ற இசை நுணுக்கத்தை அகத்தியரிடமே காட்டுவதற்காக அவரை இசைப் போட்டிக்கு அழைத்தான். சீடனும் குருவும் போட்டியில் ஈடுபடுவது குருவை அவமதிப்பதாகும். இதனை அறிந்த சித்தர்கள் பலர் இராவணனைத் தடுத்தார்கள். அளவற்ற வலிமையினாலும் எல்லையில்லா ஆற்றலினாலும் நிகரில்லாத் திறமையினாலும் பெற்ற செருக்கினால் குரு மறுக்கவும் இகழ்ச்சியுடன் வலிந்து போட்டிக்கு அழைத்தான். போட்டிக்கு மலையே நடுவராக இருந்தது. இசையில் யார் வல்லவர்? யார் வெல்வார்? என்று தெரிந்து கொள்ளமுடியாத அளவிற்குப் போட்டி உச்சமாக இருந்தது. ஈற்றில் அகத்தியரே வெற்றி பெற்றார். குருவின் மதிப்பை உணராது சீடன் போட்டியிட்டதால் ஏற்பட்ட அவமதிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அகத்தியர் இலங்கையை விட்டு இந்தியா சென்றார். இலங்கேசன் மாணவனாகவும் உறவினன் ஆகவும் இருந்தபோதிலும் அவனுடைய அகந்தையான செய்கைகளினால் வெறுப்படைந்த அகத்தியர் ஈழத்தை விட்டு வெளியேறினார்.

இலங்காபுரியில் நீண்ட நாட்களாக இராமர் இராவணனுடன் போர் புரிந்தும் வெல்ல முடியாமல் களைத்துச் சோர்ந்து தத்தளித்த நிலையில் அகத்தியருடைய உதவியை நாடி இராமன் அவரைத் துதித்தான்.

அகத்தியர் போர் முனையில் தோன்றி இராமனை ஆசீர்வதித்து ஆறுதல் அளித்து, முன்பு இராமர் வனவாச காலத்தில் அகத்தியரைச் சரணடைந்தபோது



வழங்கிய சிவனிடமிருந்து பெற்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறையையும் அவற்றின் மந்திரங்களையும் அருளிச் சென்றார். இராவணனின் வலிமை மிக்க ஆயுதங்களிலிருந்து காப்பாற்றும் மந்திரங்களையும் இராமருக்குப் போதித்தார். சூரிய வழிபாட்டு மந்திரத்தையும் கூறி, சூரியனை வணங்கி, தாம் வழங்கிய தெய்வீக ஆயுதங்களினால் போர்புரியுமாறும் கூறினார். அடுத்த நாள் போரில் அவர் கூறியவாறு செய்து இராமன் அறுவராக இராவணனைக் கொன்றான். அகத்தியரின் அருளினாலும் அவரின் ஆயுதங்களினாலும் உதவியினாலும் இராமர் இராவணனை வென்றார்.

சங்க இலக்கியங்களில் " இராவணனை தமிழ் நாட்டை ஆளாதபடி போக்கின பொதிய மலையில் இருக்கும் அகத்தியர் " என்று குறிப்பிட்டுள்ளார்கள். வாழ்வியல் களஞ்சியத்தில் சதாசிவ பண்டாரத்தார் இதனை எடுத்தாண்டுள்ளார். இராமன் இராவணனைத் தோற்கடிக்க பேராற்றல் மிக்க அகத்தியரின் உதவியே காரணம் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இராவணனை அழித்த பின்னர் அகத்தியர் பொதிய மலையிலிருந்து தமிழ் வளர்த்தார் என்றால் அப்பொதிகை மலையும் இராவணனுடைய தமிழ் நாட்டிலேதான் இருந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் இராவணன் ஆண்ட தமிழ் நாடு இலங்காபுரியைத் தலை நகராகக் கொண்ட ஈழ நாடாகும் என்பதில் ஐயமில்லை. பொதிகையில் முருகனிடம் தமிழ் கற்றார். தமிழின் பழமை வாய்ந்த இலக்கணத்தையும் இயற்றினார்.

## தமிழால் உலகளந்த ஐயர்

" என்றுமுள தென் தமிழை இயம்பி இசை கொண்டான்." என்று மகா கவி கம்பர் இராமாயணத்தில் அகத்தியரைப் பற்றிக் கூறும்பொழுது தெரிவித்துள்ளார். கம்பர் தமிழ் மொழி அகத்தியர் காலத்திற்கும் முற்பட்டது. தொன்மை வாய்ந்தது என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். அகத்தியருக்கு முன்னும் பின்னும் என்றும் நிலைத்துள்ள தென்தமிழை, தென்னாடாகிய இலங்கையின் தமிழை, தெளிவு படுத்தி இலக்கணம் செய்தார். கம்பர் " என்றும் நிலைத்துள்ள தமிழால் உலகினை அளந்தவனாகிய அகத்திய மாமுனிவன்" என்றும் இயம்பியுள்ளார்.

அகத்தியரே அன்றைய உலகம் முழுவதும் தமிழ் மொழியைப் பரப்பினார். இக் கருத்தினை வலியுறுத்தும் வகையில் மீண்டும் " நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்." மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழை உலகமெங்கனும் பரப்பியவர். அகத்தியர் ஈழத்திலோ இந்தியாவிலோ மட்டுமல்ல உலகின் ஏனைய பாகங்களிலும் தமிழைப் பரப்பியவர் என்பதை கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கம்ப கவி கம்பராமாயணம் ஆரணிய காண்டம் அகத்தியப் படலத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

அகத்தியர் சிவபெருமானிடம் தமிழ் கற்றார் என்ற விபரம் காஞ்சிப் புராணத்தில் காணக்கிடக்கிறது. தமிழை மட்டுமல்ல அறுபத்து நான்கு கலைகளையுமே சிவபெருமானிடம் கற்றார் என்பதை துறை சார்ந்த நூல்களில் ஆங்காங்கே காணலாம். மூன்றாவது தமிழ்ப் பேரவையில் முருகப் பெருமானிடம் அகத்தியர் தமிழ் கற்றார் என்ற வரலாறையும் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இடிபாடுகளுக்கிடையே
குழியம்மி
அகத்திய தாபனம்**

**மருந்துக் கருவி
அகத்திய தாபனம்**





**வேலைப்பாடுகளுள்ள
கருங்கற்தூண் நாட்டியபடி
அகத்திய தாபனம்**

**வேலைப்பாடுகளுள்ள
கருங்கற்தூண் நாட்டியபடி
அகத்திய தாபனம்**





நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களில் அவற்றினை அகத்தியர் இயற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் அகத்தியர் பெயரில் ஏடுகளாக உள்ளன. சென்னை சுவடிகள் காப்பகத்தில் அகத்தியர் இயற்றிய ஏடுகள் நூற்றைம்பதற்கு மேல் காணப்படுகின்றன.

ஈழத்தின் தமிழ்ப் பேரவைகளில் அகத்தியரின் பங்களிப்பினை பார்த்தோம். அதன் பின்னர் அகத்தியர் இந்தியாவிற்குச் சென்ற வரலாற்றினை கண்டோம். அங்கு அவருடைய தலைமையிலே முதலாவது தமிழ்ச் சங்கத்தை பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் கூடல் நகரில் இற்றைக்குப் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கினார் என்பதை பேராசிரியர் விபுலானந்த அடிகளார் தமது ஆய்வுகளினால் கண்டறிந்து உள்ளார். தற்கால வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் பன்னிரண்டாயிரம் ஆண்டு கால தமிழர்களின் தொடர்ச்சியான நாகரிக வரலாற்றினை தொடர்ச்சியாக எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்வதாக தெரிவித்துள்ளனர். முதல் தமிழ்ச் சங்கமானது கி. மு. ஒன்பதாயிரத்து அறுநூறு தொடக்கம் கி. மு. ஐயாயிரத்து இருநூறு வரை நடைபெற்றுள்ளது. முதற் சங்கம் கடல் கோள்களினால் அழிந்துபோக கி. மு ஐயாயிரத்து இருநூறில் இரண்டாவது தமிழ் சங்கத்தினை அகத்தியர் கபாட புரத்தில் ஆரம்பித்து நடாத்தி வந்துள்ளார். கி. மு. ஆயிரத்தி ஐந்நூறு வரை இரண்டாவது தமிழ்ச் சங்கம் நடைபெற்றது. அச் சங்கம் அக்காலத்தில் ஏற்பட்ட சலப்பிரளயத்தினால் அழிந்து போனது.

கி. மு. ஆயிரத்தி ஐந்நூறில் அகத்தியர் மூன்றாவது தமிழ்ச் சங்கத்தை மதுரையில் ஆரம்பித்து வைத்து ஆதரித்து வந்தார். இச் சங்கம் கி. பி. அறுநூறு ஆண்டுவரை நடைபெற்றதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வேறு சிலர் கி. பி. முன்னூறாண்டளவில் இச் சங்கம் அழிந்து விட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். மூன்று தமிழ்ச் சங்கங்களையும் அகத்தியரே ஆரம்பித்து வளர்த்தார் என்றும் தெரிவித்துள்ளார்கள். மூன்று தமிழ்ச் சங்கத்திலும் ஆயிரக்கணக்கான நூல்கள் இயற்றப்பட்டு அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. அகத்தியர் நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர்களை தமிழ்ப் புலவர்களாக உருவாக்கியுள்ளார். ஈழத்துப் புலவர்களும் இச் சங்கங்களில் புலவர்களாக அமர்ந்து தமிழை ஆராய்ந்துள்ளனர். ஈழத்துப் பூதந்தேவனாரின் பெயர் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. தொல்காப்பியரையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்றே தமது ஆய்வுகளில் தென் புலொலியூர் மு. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அகத்தியரால் இயற்றப்பட்ட தமிழ் இலக்கணம் விரிவானதாகவும் பயன்பாடு கூடியதாகவும் இருந்துள்ளது. பிற் காலத்தில் வீரமாமுனிவர் என்று அழைக்கப்பட்ட வெஸ்கி பாதிரியார் அதனைத் திருத்தி இலகுவான எழுத்துக்களாகவும் சுருக்கியும் அமைத்துள்ளார். அதனால் பயன்பாடும் சுருங்கிவிட்டது. ஔவையார் என்ற பெண் புலவர் மூன்றாவது தமிழ் சங்கத்தின் உறுப்பினராக இருந்து தமிழை வளர்த்துள்ளார். மாது உரை செய்த இடம் மதுரை என்றாகியது. ஔவை தமிழ் சங்கத்தில் உரை நிகழ்த்தியதால் அந்த இடம் மதுரை என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியருடைய மாணாக்கர்களாக தொல்காப்பியர் முதலான பன்னிருவர் இருந்துள்ளனர். பேராசிரியர் சதாசிவ பண்டாரத்தார் இவர்களை இயற்றமிழ் மாணவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இசைத் தமிழுக்கும் சிகண்டி முதலான பன்னிருவர் மாணாக்கர்களாக இருந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இவர்களைப் போலவே நாடகத் தமிழுக்கும் பன்னிரு மாணாக்கர்கள் இருந்திருத்தல் வேண்டும். அகத்தியர் முத்தமிழையும் தனித்தனியாக வளர்த்துள்ளார். அகத்தியர் தமிழுக்கு ஆற்றிய பணிகளை குறிப்பிடும்போது "தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்று அகத்தியர்தான் தமிழைத் தந்தார் என்று சிறப்பாகக் கூறியுள்ளார்கள்.

திருமங்கலாயில் சிவன் கோவிலைக் கட்டினார். கங்கை வேலி திருக்கரசை யில் ஆதிசிவன் கோவிலைக் கட்டினார். அகத்திய தாபனத்தில் அகத்திய லிங்கத்தை வைத்தார். அதுமாத்திரமல்ல திருக்கரசை ஊரின் மாவலியாற்றுக்கரையில் அகத்தியர் தீர்த்தம் என்று நீர் ஆடி இகபர சுகபோகங்களைப் பெற்றதால் அன்று தொடங்கி இன்றும் கிழக்கிலங்கை மக்கள் அகத்திய தீர்த்தம் என்று ஆடி அமாவாசை அன்று திருக்கரசை சிவபெருமானை, திருமங்கலாய் சிவனை எழுந்தருளப்பண்ணி மிகச் சிறப்பாக ஆடிவருகிறார்கள். இருபதினாயிரும் மக்கள் வரை ஆற்றோரத்தில் மருதமரங்களின் சோலைக்கு நடுவே முதல்நாள் இரவு கூடி திருக்கரசை புராண படனமும் பயன் சொல்லுதலும் நடைபெறும். பின்னர் பக்தர்களின் தீ மிதிப்பு இடம்பெறும். அடுத்தநாள் அமாவாசை உதயத்தில் தீர்த்தமாடுவார்கள். ஆறு மனிதத் தலைகளால் மறைக்கப்பட்டு மக்கள் நிரம்பி வழிவர். அடியார்களின் பக்தியும் பரவசமும் கண்கொள்ளாக் காட்சியாகும். பாலர் முதல் கிழவர் வரை ஆண்களும் பெண்களும் நீராடி இம்மையில் சகல செல்வச் சிறப்புகளையும் மறுமையில் சிவ பதத்தையும் பெற்று வருகிறார்கள். இப்புனித தலங்களைத் தரிசிக்கவும், புண்ணிய நதியில் நீராடவும் பெரும் தவம் செய்து பிறத்தல் வேண்டும் என்பதை தெட்சண கைலாச புராணம் தெரிவிக்கின்றது.

## அருந்தவசித்தாந்தம்

அகத்தியர் சைவசித்தாந்தத்தினை திருக்கைலாயத்தில் சிவபெருமானிடம் அறிந்தவர். அதனை உலகிற்கு அறிவித்தவர். சாதாரணமாக சில அற்ப சித்திகள் கைவரப்பெற்றவர்கள் தம்மை பிரமம் என்று அழைக்கின்ற போதும், அகத்தியர் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்று இருந்தும் தம்மை சீவாத்மாவாகவும் சிவனை பரமாத்மாவாகவும் பாவித்தவர். பதி, பசு, பாசம் என்ற முப்பொருளின் உண்மையை உலகிற்கு உணர்த்தியவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவநாற்பாதங்களின் வழியில் நின்றவர். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம் பொருளாகிய பரமசிவன் வேறு, ஆத்மாவாகிய நாம் வேறு என்ற கோட்பாடு உடையவர். சிவவழிபாட்டினை, சிவலிங்க பூசையை உலகின் பல நாடுகளிலும் பரப்பியவர், உலகின் பல பாகங்களிலும் சிவன் கோவில்கள் தோன்றுவதற்கு காரணமாக இருந்தவர். சூரியனை சிவனின் பிரதிவிம்பமாக கருதி சிவசூரியன் என்ற சூரிய வழிபாட்டினை உருவாக்கியவர்.



சீவாத்மா பரமாத்மாவோடு இணைதலே யோகம் ஆகும். யோகம் எட்டு படிநிலைகளை கொண்டது. சாதனைகளினால் ஒவ்வொரு படியாக அடுத்த படிக்கு செல்ல வேண்டும். அவை இமயம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். சைவசித்தாந்தத்தின் அடிப்படையிலேதான் யோகசாதனைகளை செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே வீடுபேறு சாத்தியமாகும்.

சைவசமய வழிபாடுகள் தாம்தாமே இயற்ற வேண்டியவையாகும். வழிபாடுகளை இயற்றுவதற்கு குரு ஒரு வழிகாட்டியாவார். சிவபூசைக்கு பூவும், நீரும், தூபம் தீபம், தியானம், தமிழ்மந்திரங்களுமே பயன்பட்டு வந்தன. நன்நெறியும், நன்நடத்தையும் கொண்ட ஆசாரமே பூசிப்பதற்கு உரிய தகுதியாக இருந்து வந்துள்ளது. குலம், கோத்திரம், சாதி, தொழில் இறைவழிபாட்டினை நிறைவேற்றுவதற்கு தமிழ் மக்களுக்கு தடையாக இருந்தது இல்லை. சிவநெறியில் நின்றவர்கள் பூசனை புரிந்தவர்கள் சைவர் எனப்பட்டனர். சரியை, கிரியை, யோகம், ஞானத்தினால் இறைவனை உணர்ந்தவர்களும் சிவன் அருளை பெற்றவர்களும் ஐயர் ஆக இருந்துள்ளனர். பிறப்பினால் ஒருவர் ஐயர் ஆகும் முறை சைவசமயத்தில் இல்லை. சிவநெறியானது தமிழ் மக்களின் இறைவழிபாட்டு வழியாகும்.


ஆற்றோரங்கள் குளக்கரைகள் கடற்கரைகள் தீர்த்தச்சுனைகள் கோவில்கள் மடங்கள் ஆச்சிரமங்கள் இல்லங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் சிவபூசைகள் இடம் பெற்றன. அகத்தியர் காட்டிய ஆன்மீக வழியிலேயே தமிழர் ஒழுகியுள்ளனர். பிறப்பினால் யாரும் சைவ சமயத்தவர்கள் ஆவது இல்லை. சிவதீக்கை பெற்று சிவநெறியை கடைப்பிடித்து ஒழுகுவதன் வாயிலாக ஒருவர் சைவசமயத்தவர் ஆகின்றார். சிவாயநம என்பதற்கு மேலான மந்திரம் இல்லை. பக்தி இசைகளினாலும், பாமாலைகளினாலும், கூட்டு பிராத்தனைகளினாலும், பாடியும் ஆடியும் அவன் புகழை பேசியும் இறைவனை மகிழ்வித்தார்கள். இசையினால் இலகுவாகவும் விரைவாகவும் இறை இன்பத்தினை அடைந்தார்கள்.

ஆத்மாவின் வினைகளினால் புண்ணியமும் பாவமும் ஏற்படுகின்றன. நாம் செய்யும் நல் வினைகள் புண்ணியத்தினையும் தீ வினைகள் பாவத்தினையும் கொடுக்கின்றன. அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அனுபவித்த ஆன்மா இறுதியில் வீடு பேற்றை அடைகின்றது. சித்தத்தின் உள்ளே சிவனைக் கண்டவர்கள் சித்தர்கள். எல்லா உயிர்கள் மீதும் கருணை உள்ளம் கொண்டவர்கள். யாவர்க்குமாம் இறைவனுக்கு ஒருபச்சிலை, பசுவுக்கு ஒருவாயுறை, உண்ணும்போது ஒரு கைப்பிடி, பிறர்க்கு இனியமொழி கூறுதல் என்பவை சிவ நெறியாகும். சிவசிவ என்றால் தீவினை மாளும். சிவசிவ என்றிட தேவரும் ஆவர். சிவசிவ என்றிட சிவகதியாமே என்பது சித்தர் வாய் மொழியாகும்.

அளவற்ற அன்பாளர், வரம்பில்லா ஆற்றல் உள்ளவர், நிகரற்ற பண்பாளர் எல்லா உயிர்களுக்கும் தாயானவர். வேண்டுவார் வேண்டுவதை ஈபவர் எம் இறைவன் ஆவார். எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவேயன்றி வேறு ஒன்றுயறியேன் பராபராமே என்பதுவே சைவ நீதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கங்கைவெளி நாகரிகம் தோன்றிய இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அகத்தியரின் அம்மி,
இடிபாடுகள் மருத்துவ
எண்ணெய்த்தொட்டி
அகத்திய தாபனம்**



**கருங்கல் நிலத்தில்
பதிக்கும் கல்.**



**திருக்கரசை மாநகர்
சிவன் பார்வதி உருநாடு**



**கங்குவேலி கல்வெட்டு
திருக்கரசை மாநகர்**



திருவிளையாடல் புராணம் அகத்தியர் சிவனிடம் தமிழ் கற்றார் என மொழிகின்றது. சைவசித்தாந்த அறிஞர் ஆகிய அருணந்திசிவாச்சாரியர் அகத்தியரை பற்றி குறிப்பிடும் போது, "அருமறை யாகம மருங்கலை நூறெரிந்த அகத்தியன்" என்றார். அகத்தியர் தமிழ்மறையாகிய சைவசித்தாந்தத்தினையும், தமிழ் ஆகமங்களையும், அரிய தமிழ் கலைகளையும், பல நூல்களையும் கற்று தேறியவர் ஆவர். திருக்கைலய முனிவர்கள் எழுவரில் ஒருவராக அகத்தியர் இருந்துள்ளார். ஈழகைலாயத்திலேயே சிவனும் உமையும் வாழ்ந்தார்கள்.

அடையுமாமுனி வெள்ளி மால்வரையதனில் கொருமுடியதாய்க்
கடவுள் வாழ் திரிகோணை யங்கிரி கண்டு சிந்தைமிகக்களித்து
இடைவிடாதிருபோதும் நல்லடையிட்டு நாண் மலரிட்டுவன்
தொடை குலாவிய வாலசந்திரர் சூடினாரடி சூடினான்.

என்கிறது திருக்கரசைப் புராணம். இமயமலை அரசன் மகளாக அம்பிகை அவதரித்தபோது பார்வதியை திருமணம் செய்வதற்காக இக்கைலைமலையில் இருந்து தமது பரிவாரங்களுடன் இமய மலை சென்றார். கைலாயம் தெற்கே மேருமலையிலும் பருவதம் வடக்கே இமயமலையிலும் அமைந்திருந்தன. அகத்தியரும் மணவிழாவினைக் காண இங்கிருந்து சிவபெருமானுடன் இமயமலைக்கு சென்றார். திருமணத்திற்காக உலகோர் வடக்கே இமயமலையில் ஒன்று கூடியதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. திருமணவிழாவுக்கு வந்தவர்கள் நிற்க முடியாது அவதிப்பட்டு தடுமாறினார்கள். அகத்தியரால்தான் இதனை சீர்செய்ய முடியும் என்பதனை உணர்ந்த சிவன், அகத்தியரை அழைத்து இதனை சீர்படுத்த உம்மால்தான் முடியும் நீர் உடனே தெற்கே உமது இடத்துக்கு திரும்பி செல்ல வேண்டும். தெற்கு உயர்ந்த புதிய மலையை சமப்படுத்த வேண்டும் என்றார். திருமணவிழாவினைக் காணாமல் திரும்புவதற்கு அகத்தியர் மனம்வருந்தினார். சிவபெருமான் உமது இருப்பிடத்தில் இருந்து திருமணக்காட்சியைக் காண்பதற்கு அருள் புரிவதாகவும் திருமணக்கோலத்திலேயே அம்மை அப்பராக அங்கு வருவதாகவும் திருவாய் மலர்ந்தருளினார். அகத்தியரும் முத்தூர் திருமங்களாயில் உள்ள தமது இருப்பிடத்துக்கு வந்தார். வரும் வழியில் உயர்ந்த புதிய மலையை அமர்த்தி சமப்படுத்தினார். திருமங்களாயில் இருந்தே பார்வதி கலியாண விழாவை கண்டு மகிழ்ந்தார். திருமணம் முடிந்து பார்வதி பரமேசுவரனாக இமயத்தில் இருந்து மீண்டும் கைலாயத்துக்கு எழுந்தருளினார்கள். எழுந்தருளும் போது கைலாயத்தின் அடிவாரத்தில் பக்கமாக இருந்த திருமங்களாய் ஆச்சிரமத்திற்கு சென்று திருமணக் கோலத்துடன் அகத்தியரை மகிழ்வித்தார்கள். பார்வதி பரமேசுவரன் மணக்கோலத்துடன் மங்களமாக வந்ததனால் அன்றில் இருந்து அவ்விடம் திருமங்களாய் என அழைக்கப்படலாயிற்று எனலாம்.

அருணகிரிநாதர் திருப்புகழிலும் தட்சணகைலாயபுராணம், திருக்கரசைப் புராணம் ஆகியவற்றிலும் அகத்தியர் கோணமாமலை ஈசனை வழிபட்டுள்ளார் என்ற வரலாறு காணப்படுகிறது. திரிகோணமலை வில்லூன்றி பிள்ளையார் அகத்தியர் வழிபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆலயத்துடன் தொடர்புள்ளவர்களாலும் மக்களாலும் கூறப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அகத்தியர் வழிபடுவது போன்ற சிலா வடிவமும் அமைக்கப்பட்டுக் காணப்படுகிறது. அகத்தியர் திருக்கேதீஸ்வரத்தில் கண்டகிலிங்கத்தை உருவாக்கி வழிபாடு செய்துள்ளார். சுயம்பு நாதர் கோவிலிலும் திருக்கேதீச்சரம் செல்லும் பாதையில் அவர் வழிபாடு செய்தார் என்று கூறப்படுகின்றது. பொத்துவில்லுக்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் இடையிலேயே சுயம்பு நாதர் கோவில் அமைந்துள்ளது.

தமிழ் நாட்டில் அகத்தியர் வழிபட்ட கோவில்களில் அவர் திருவுருவங்களும் வைக்கப்பட்டுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சி மாநகரில் பல்லவ மன்னனாகிய இரண்டாம் நரசிம்ம வர்மனால் எடுப்பிக்கப் பெற்ற கைலாச நாதர் ஆலயத்தின் தெற்குப் பிரகாரத்தில் உள்ள அகத்தியர் கோவிலே தமிழ் நாட்டு அகத்தியர் கோவில்களுள் மிகப் பழமை வாய்ந்ததாகும். சிவபெருமான் அகத்தியருக்கு அருள் புரிந்த சிறப்பினை சுந்தர மூர்த்தி நாயனார் திருநின்றியூர் பதிகத்தில் எடுத்தாண்டுள்ளார். ஈழத்தின் மணிபல்லவத்தை சேர்ந்த அரசர்களே காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களாவர்.

அகத்தியர் லோபாமுத்திரையுடன் விந்திய மலையிலிருந்து கடுந்தவமியற்றினார். சிவன் அவர்களின் முன்தோன்றினார். திருக்காளாத்தியில் புனித கங்கை ஆறு பெருகி ஓட வேண்டும் அதுவே என் அவா என்றார். கங்கை பெருகி ஓடியது. அதற்கு பொன் முகலியாறு என பெயரிட்டனர் (சுவர்ணமுகி). இவ்வாறு அவர்கள் தவம் செய்த விந்தியமலையே இன்று தமிழ்நாட்டில் பொதியமலை என்றழைக்கப்படுகின்றது.

திருமறைக்காட்டில் அகத்தியர் தங்கியுள்ள இடம் அகத்தியான் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. மலைய மலையில் அகத்தியர் ஆச்சிரமம் என்ற கோவில் காணப்படுகின்றது. அகத்தியரின் கருங்கற் சிலை மூலவராக அமைந்துள்ளது. தென்பாண்டி நாட்டிலே சிவனடியாரான அகத்தியரை மேனி முழுவதும் வெந்நிறணிந்தவரைத் திருக்குற்றலாத்துள் பிரவேசிக்க விடாது வைணவர்கள் ஆணவத்தால் தடுத்தார்கள். அவர் மாறு வேடம் பூண்டு திருமால் கோவிலுட் சென்று அங்கிருந்த திருமால் சிலையைத் தமது கையினால் சிவலிங்கமாக மாற்றி வழிபட்டர் என்பது பழைய வரலாறாகும். இச் செயலால் இவரின் சிவபக்தியின் மாண்பு எத்தகையது என்பது இனிது புலப்படுகின்றது என்று சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிட்டுள்ளார். தேவாரத்திரட்டு ஆறெழுத்து அந்தாதி ஆகியவை வேறு அகத்தியரால் இயற்றப்பட்டு இருக்கவேண்டும். கடைச் சங்க காலத்திற்குப் பின்னர் அகத்தியரின் வரலாறு காணப்படவில்லை. ஏழாம் நூற்றாண்டில் அவருக்கு ஆலயம் அமைக்கப்பட்டுவிட்டது. எனவே இந்நூல்களை அவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை. தமிழகக் கருங்கற்கோவில்களாக உள்ள சிவன் கோவில்கள் எல்லாவற்றிலும் அகத்தியர் படிமங்கள் காணப்படுகின்றன.



ஆக்கவும் அழிக்கவும் வல்லவராய் முக்காலங்களும் உணர்ந்தவராய் நிறைமொழி மாந்தராக நிலவும் சித்தர்கள் யாண்டும் எளிதிற் போவதற்கும் இருப்பதற்கும் ஆற்றல் படைத்தவர்களாவர். சாவகத்தில் (யாவா) அகத்தியர் சிவன் கோவில்களைக் கட்டுவித்தார் என்ற வரலாறு காணப்படுகின்றது. கி.பி. எழுநூற்றி அறுபதில் யாவாவை ஆட்சி செய்த அரசன் அகத்தியர் கோவில்களைக் கட்டி அங்கு கருங்கற் படிமத்தினை எழுந்தருளிவித்தான். அகத்தியரின் மரப் படிவம் முன்பு இருந்ததென்றும் கல்வெட்டுக் கூறுகிறது. இந்து சீனம், மலேயா நாடுகளிலும் அகத்தியர் சிவ வழிபாட்டினை ஏற்படுத்தினார் என்று காணப்படுகின்றது. காம்போஜம் (கம்போடியா) என்ற நாட்டில் அகத்தியர் இரண்டு சிவன் கோவில்களை கட்டுவித்தார் என்றும் கல்வெட்டுக்கள் மூலம் அறியவருகின்றது.

அகத்தியர் பொதியிலில் வசித்த காலத்தில் தன் சீடனான இடும்பாசுரனை அழைத்து கயிலைமலை சென்று அங்கு முருகப் பெருமானின் கந்தமலையில் காணப்படும் சிவகிரி, சந்திரகிரி என்னும் இரு சிகரங்களையும் தன் வழிபாட்டுக்காக பொதியிலுக்கு கொண்டுவரும்படி பணித்தார். இடும்பாசுரன் மிகவும் பலசாலி. முருகபக்தன். அவன் முன்பு சூரபத்மனிடம் போர்க்கலைகள் பயிற்றுவிக்கும் ஆசானாக இருந்தவன். சூரனின் கொடுமையால் அவனைவிட்டு நீங்கி அகத்திய சித்தரின் சீடனானவன். அகத்தியரின் கட்டளைப்படி இடும்பன் ஒரு பெரிய பிரமதண்டத்தின் இருமுனைகளிலும் இரு சிகரங்களையும் கெட்டியாக கட்டி தன் தோள் மீது சுமந்து பொதியில் நோக்கிப்புறப்பட்டான். போகும் வழியில் களைப்பினால் காவடியை இறக்கி வைத்து சற்று நேரம் இளைப்பாறினான். பின்பு அதைத் தூக்க முயன்றும் முடியவில்லை. ஆராய்ந்து பார்த்தபோது முருகன் கோவணக்கோலத்தில் சிவகிரி குன்றின் மீது நிற்பதைக் கண்டான். முருகன் அனுமதியின்றி இரு சிகரங்களையும் எடுத்து வந்த தவறினை உணர்ந்து அவன் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கி சரணடைந்தான். அவன் பக்தியை மெச்சி இடும்பனை தன் காவல் தலைவனாக நியமித்தார். இடும்பனைப்போல காவடி எடுத்து வரும் அடியவர்களுக்கு முருகன் அருள்புரிகின்றான். அகத்தியர் தொடக்கி வைத்ததே காவடி வழிபாடாகும்.

## ஆனானப் பெருமை அகத்தியன்

கம்பராமாயணம் ஆரண்ய காண்டம் அகத்தியப் படலத்தில் ஒருகை வாரிணன் முகந்து கடலெல்லாம் உண்டவர் பின் உமிழ்ந்தவர் என்று அவர் பெருமையை கம்பர் தெரிவித்துள்ளாரென்றால் அகத்தியர் பெருமைதான் என்னே. ஒரு கையால் கடலை வாரி உண்டவர். பின் தேவையானபோது உமிழ்ந்தவர் என்றால் ஆற்றலை அளவிடமுடியுமா?

இராமர் வனவாசத்தின்போது தண்டகாருண்ய வனத்தில் அகத்தியர் வசிப்பதை அறிந்து அவரை சென்று காண்பதற்காக விரைந்தார். இராமன் அகத்தியர் காலில் வீழ்ந்து வணங்கி அவரைச் சரணடைந்தான் எனக் கம்பர் அகத்தியரை மேன்மையாக குறிப்பிட்டுள்ளார். நின்றவனை வந்த நெடியோன் அடிபணிந்தான் என்று கம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துள்ளார். திருமாலின் அவதாரம் என்று வர்ணிக்கப்படும் இராமன் சிவனை ஒத்த வல்லமை பொருந்திய அகத்தியரைத் தஞ்சமடைந்தான் என்பதாகும். இதனை "செந்நி துண்டமதி வைத்தவனை ஒத்த முனி" என்று கம்பர் எடுத்துக் காட்டியுள்ளார்.

பார்வதியின் மணவிழாவில் பூமி தெற்கே புதிதாக உயர்ந்து விந்தையாக வானை முட்டியது. அகத்தியர் அப்புதிய மலையை தம் கையால் அமர்த்தி சமநிலைக்கு கொண்டு வந்தார். ஒரு சிறுபொழுதில் விந்தைய மலையிலிருந்து அதனை அழித்து விட்டார். புதிய மலையென்ற சொல் மருவி பொதிய மலை என வழங்கப்படுகிறது. விந்தையாக தோன்றிய மலை என்ற படியால் விந்தைய மலை என்றும் அழைக்கப்படுகின்றது. அங்கிருந்து அவர் திருமங்களாய் சென்றார். இராமாயணத்தில் வால்மீகி அகத்தியர் குடகு மலையில் இருந்தார் என்றே குறிப்பிட்டுள்ளார். பொதிகை மலைபற்றிக் குறிப்பிடப்படவில்லை.

பதினெண் சித்தர்களைப் பற்றி ஆய்வு செய்த அமெரிக்காவைச் சேர்ந்த மார்சல் கோவிந்தன் இற்றைக்குப் பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்னர் தொடங்கி அகத்தியருடைய வரலாறு தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. வயதெல்லை இல்லாத குரு, குருவுக்கெல்லாம் மகா குரு, சித்தர்களுக்கெல்லாம் தலைமைச் சித்தர் அகத்தியர் என்று குறிப்பிட்டுள்ளமை ஈண்டு கவனிக்ககற்பாலது.

நகுசன் என்ற அசுரன் தவம் செய்து சிவனிடம் இருந்து பெரும் வரங்களைப் பெற்று இந்திரனை வென்றான். வென்றவுடன் இந்திராணியையும் தன் மனைவியாக்க விரும்பினான். இந்திராணி ஓடி ஒளிந்து மறைந்தாள். நகுசனும் விடவில்லை எங்கும் ஓடினான் தொடர்ந்தான். இந்திராணி இறைவனை வேண்டிக் கலங்கினாள். அப்பொழுது அவ்வழியே வந்த நாரதரிடம் தன் குறையைச் சொல்லி இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற உதவுமாறு வேண்டினாள். நகுசனை புனிதனாக நீராடி புத்தாடை ஆபரணங்கள் அணிந்து சப்த முனிவர்கள் பல்லக்கைத் தூக்கிவர அதில் வரவேண்டும், அவ்வாறு வந்தால் சந்திப்பதற்குத் தயார் என்ற சொல்லி அனுப்பினால், நீ ஆபத்திலிருந்து தப்பலாம் என்று நாரதர் கூறினார். இந்திராணி இதனை தெரிவித்து நகுசனுக்கும் தூது அனுப்பினாள். கேட்ட மாத்திரத்திலேயே மகிழ்ச்சியடைந்து காமத் தீயினாலும் இந்திராணி மோகத்தினாலும் நகுசன் வந்து கொண்டிருந்தான். வரும்பொழுது அகத்தியர் மிகவும் குள்ளமானவர் என்பதால் பல்லக்கினைச் சரியாகத் தூக்கமுடியவில்லை. விரைவாக நடக்கமுடியவில்லை இதனைக் கண்ட நகுசன் அகத்தியரைப் பார்த்து அடிக்கடி சர்ப்ப, சர்ப்ப (விரைவாக) என்று கட்டளையிட்டான். அகத்தியர் கோபமேலீட்டினால் நீ சர்ப்ப சர்ப்ப என்றதால் சர்ப்பமாக கடவாய் என்றார். உடனே பல்லக்கிலிருந்த அசுர இந்திரனான நகுசன் சர்ப்பமாக மாறி நிலத்தில் வீழ்ந்தான். இந்திராணியும் ஆபத்திலிருந்து தப்பினாள்.

அகத்தியரைக் கொல்வதற்காக வில்லவன், வாதாபி என்னும் அசுரர்கள் அவரை விருந்திற்கு அழைத்து வாதாபியைக் கடாவாக மாற்றி கறி சமைத்து உண்ணக் கொடுத்தார்கள். அகத்தியரின் வலிமையினால் வாதாவி மீண்டும் உயிர்த்தெழ முடியாமல் சீரணமாகி விட்டான். வாதாபியிருந்த இடமே இன்று வாதாபி என்று அழைக்கப்படுகின்றது.



அகத்தியர் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்த போதும் பூமியில் ஐயாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் அதைப்போல பல மடங்கு காலம் சீவ சமாதியில் இருந்தார் என்றும் காணப்படுகின்றது. உலக வாழ்க்கை வெறுக்கும்போது சீவ சமாதி அடைந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சமாதியிற் கழித்தார். தாம் விரும்பியபோது உறக்கத்தில் இருந்து விழிப்பதுபோல சமாதியிலிருந்து எழுந்து வெளியே வந்து வாழந்தார். அகத்தியர் இவ்வாறு பல முறை சீவ சமாதிக்குச் சென்று திரும்பினார். அட்டமா சித்துக்களினாலும் பேரின்பத்தை நிரந்தரமாக அடை முடியாததினால் பூவுலக வாழ்க்கையில் சலித்துப் போனதினால் இறுதியில் சிவனிடம் இரண்டற இணைந்து முத்தியடைந்தார் என்பதைப் போகர் ஏழாயிரம் என்ற நூலில் காணலாம். " எண்ணாயிரத்தாண்டு யோகமிருக்கிலும் கண்ணாரமுதனைக் கண்டறிவார் இல்லை" என்று திருமூலர் தாம் எண்ணாயிரம் ஆண்டுகள் யோக நிட்டையில் இருந்தும் இறைவனை அடையமுடியவில்லை என்று வருந்துகின்றார். இந்த வரலாற்றுக் குறிப்பினை நவீன விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகமே. இருந்தாலும் வளர்ச்சியடைந்து வரும் விஞ்ஞானம் இந்த உண்மைகளையும் நிறுவும் காலம் வெகு தூரத்தில் இல்லை. சித்தர்கள் காய கல்பம் என்ற மருந்தினை உண்டு தமது உடலானது நீர் நெருப்பு காற்றினால் சிதையுறாவண்ணம் பாதுகாத்தார்கள். காயம் என்ற உடல் கல்போன்ற வைர மாகுதல் கற்பம் எனலாம். அதனால் சித்தர்களின் உடல்கள் சமாதி அடைந்த பின்னர் கூட ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரை அழியாமல் இருக்கக்கூடியன. சித்தர் பாபாஜியின் சமாதி இமயமலையில் உண்டு. இற்றைக்கு ஆயிரத்தி எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாபாஜி சமாதி அடைந்தார். சரப்பழக்கத்தினால் சுவாசத்தைக் குறைக்கவும் நிறுத்தவும் சுவாசமின்றி உறங்கும் நிலையில் உயிர் வாழவும் வல்லவர்கள் சித்தர்கள், சமாதி நிலையில் உயிர் உறங்கு நிலையில் இருக்கும்.

கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம் ஒரு
சிங்க முதுகின் மேற் கொள்ளலாம்
கட் செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலில் இரதம் வைத்தைந்து லோகத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடு இருக்கலாம் மற்றுமொரு
சரீரத்தினுள் புகுதலாம்
நீர் மேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்து ஆகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவு ஆன
தெய்வமே தேஜோமயானந்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலில் தாம் பெற்ற சித்திகளினால் எவற்றையெல்லாம் செய்யக்கூடிய வல்லமையை சித்தர்கள் பெற்றிருந்தார்கள் என்பதை இந்தப் பாடல் தெரிவிக்கின்றது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் பலகாலமாக நீடித்தது. விருத்திராசுரன் என்ற அசுர வேந்தன் தேவர்களைத் தாக்கிவிட்டு கடலின் அடியில் ஓடி ஒளிந்து கொண்டான். இந்திராதி தேவர்களால் அவனை ஒன்றும் செய்யமுடியவில்லை. இந்திராதி தேவர்கள் கங்கைவேலி சென்று அகத்தியரிடம் சரண்புகுந்தனர். இந்திரன் யானை வடிவில் அங்கு கரந்துறைந்தான். அதனால் அவ்வூர் திருக்கரசை என அழைக்கப்பட்டது. அகத்தியர் கடல் நீரை கையால் மொண்டு குடித்தார். விருத்திராசுரன் வெளிப்பட்டான். தேவர்கள் அவனைக் கொன்று விட்டனர். பின் இந்திரன் கடல்நீரை மீண்டும் வெளிவிடுமாறு வேண்டினான். அகத்தியர் திருக்கரசைப் பதியிலிருந்து கடல் நீரை உமிழ்ந்து கடலை மீண்டும் நிரப்பினார். அவ்வாறு ஓடியநீரே கோயிற்தலமடுவிலிருந்து ஓடும் அகத்தியனாறு என்னும் சிற்றாறு என்று கங்கைவேலி மக்கள் தெரிவிக்கிறார்கள்.


## அரசர் குலக்குரு

ஈழத்திலும் உலகின் பல பாகங்களிலும் பல இராச்சியங்களை உருவாக்கியவர் அகத்தியர். ஆங்காங்கே அவ் இராச்சியங்களை ஆட்சி செய்ய அரசர்களை நிலைப்படுத்தினார். அரசர்கள் உயர்ந்த மரபுகளோடு மேன்மை கொள் சைவ நீதி வழுவாது ஆட்சி செய்து வருவதற்காக அரசர்களுக்குக் குருவாக அமர்ந்து வழிகாட்டினார். தமக்கு பின்னரும் தமது மாணாக்கர்களை மன்னர்களுக்கு ஐயராக அமர்த்தி நெறிப்படுத்த வழி செய்தார்.

ஈழ மண்டலத்தின் ஆதிமன்னர்களான மாலியவான், சுமாலி, குபேரன், இராவணன், விபிடணன் ஆகியோருக்கு அகத்தியரே குருவாக விளங்கியதை அறியக்கூடியதாக உள்ளது. இந்தியாவில் பாண்டிய மன்னர்களுக்கும் குருவாக அமர்ந்தவர் என்பதைச் சின்னமனூர்ச் செப்பேடுகளில் " பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது" எனக் குறிப்பிட்டுள்ளது. மகாகவி காளிதாசனும் தமது ரகுவம்சம் என்னும் நூலில் அகத்தியருடைய சீடன் பாண்டியன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அகத்தியர் மலய மலையில் தங்கியிருந்த காலத்தில் சோழ அரசர்களுக்கும் குருவாக இருந்தார். அகத்தியருடைய ஆணையின்படி காந்தன் என்ற சோழ மன்னன் காவிரியாற்றினை வெட்டுவித்தான் என்பதிலிருந்து உணரக்கூடியதாக உள்ளது. மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் இதனைத் தெரிவித்துள்ளார். விதர்ப்ப நாட்டு அரசனுக்கும் அகத்தியர் குருவாக அமர்ந்து உள்ளார். அக்காலத்தில் அவன் மகள் அனுசூயாவை விரும்பித் திருமணம் செய்தார். அனுசூயா அகத்தியருடன் சென்று ஆச்சிரமத்தில் வாழ மறுத்துவிட்டாள். அகத்தியர் அரண்மனையைக் கட்டி அங்கு வாழ்வதற்கு ஏற்பாடு செய்தால் வருவதாக





கங்குவேலி கல்வெட்டு
திருக்கரசை மாநகர்



திருமங்கலாய் கோவில்



தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருமங்கலாயில் வழிபடுகிறார்.



திருமங்கலாய் விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்தாள். அனுசூயாவின் கோரிக்கைக்கு அமைய காட்டை அழித்து ஒரு நாட்டையும் நகரையும் அரண்மனையையும் கட்டி அனுசூயாவுடன் இல்லறத்தில் இனிதே மகிழ்ந்திருந்தார். அகத்தியர் நகரை நிர்மாணிக்கவும் அரண்மனையைக் கட்டுவதற்கும் தேவையான பொன்னை தமது குருவிற்கு சோழ மன்னன் வழங்கி உதவினான். அகத்தியரிற்கும் அனுசூயாவிற்கும் புத்திரர்கள் இருந்தார்கள்.

யாவா அரச பரம்பரைக்கும் குருவாக அகத்தியர் விளங்கினார். காம்போஜ நாட்டின் மன்னர்களின் முன்னோர் அகத்தியர் என்றும் அவர் நரேந்திரவர்மன் என்ற அரசனுக்குக் குருவாக இருந்தர் என்றும் கி.பி. எண்ணூற்றி எண்பத்தொன்பதில் அந் நாட்டின் வரையப்பட்ட கல்வெட்டில் காணப்படுகின்றது.

## இந்திரனின் குரு

தேவலோக அரசனான இந்திரனுக்கும் அகத்தியரே அரசகுருவாக இருந்து போர்கலை முதலிய அறுபத்தினான்கு கலைகளையும் போதித்துள்ளார். அகத்தியரிடம் வாள், வில் அம்பு ஆகியவற்றின் பயிற்சிகளைப் பெற்றும் போர் நுட்பங்களையும் தந்திரங்களையும் சிறப்பாகக் கற்றும் தேர்ச்சி பெற்றான். எல்லாவற்றையும் தமக்கு சிறப்பாகக் கற்றுத்தந்த குருவிற்கு கூலியாக இந்திரன் தான் சிவனிடம் வரமிருந்து பெற்ற வில் அம்பு வாள் கவசம் ஆகியவற்றை வழங்கினான்.

அகத்தியர் போர்க்கருவிகளிலும் அவற்றின் மந்திரப் பிரயோகங்களிலும் தலைசிறந்தவர். அதுமட்டுமல்ல அவர் வாள், வில், அம்பு, தண்டம், வேல், சூலம் முதலிய போர்ப்படைக்கலங்களின் உற்பத்திமுறைகளிலும் நன்கு தேர்ந்தவர். போரில் பயன்படுத்தும் கவசங்கள் போரில் தேர்களின் அமைப்பு, குதிரை, யானை ஆகியவற்றை பயன்படுத்துதல், பயிற்றுவித்தல் ஆகியவற்றிலும் படைகளை வியூகம் வகுப்பதிலும் அகத்தியருக்கு நிகர் எவரும் இல்லை. போரினை ஆரம்பிக்க வேண்டிய கிரகநிலை, நட்சத்திரம், திதி பற்றிய விபரங்களையும் நாளும் கோளும் போரில் வெற்றியைத் தேடித்தரும் அமைப்பு என்பன பற்றி எல்லாம் தமது சோதிட நூல்களில் தெரிவித்துள்ளார். அகத்தியர் போர்க்கலைப்பற்றி எழுதிய நூல் சக்தி சூத்திரம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

## மருத்துவ முறையின் தந்தை

தமிழ் மக்களினால் மருத்துவ முறையின் தந்தையாக அகத்தியச் சித்தர் போற்றபடுகின்றார். முத்தூர் கரசையில் பதினென் சித்தர்களால் அகத்தியர் தலைமையில் மருத்துவம் சிறப்பாகப் போதிக்கப்பட்டு வந்துள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் தோன்றியிருத்தல் சாத்தியமாகும். அகத்தியத் தாபனத்தில் கலாசாலை, மருத்துவசாலை, மருந்துச்சாலை, வழிபாட்டு இடம் ஆகியன அமைந்து இருந்தன. வசதிகளுடன் கூடிய அங்கே உள் நோயாளர்களாகவும் வெளி நோயாளர்களாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டும். அதற்கான எச்ச சொச்சங்கள், அம்மி முதலிய கங்கைவெளி இடிபாடுகளுள் காணப்படுகின்றன.

அகத்தியரால் மருத்துவத்துறை சார்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டு உள்ளன. அகத்தியம் இருபத்தோராயிரம், அகத்தியர் பன்னீராயிரம், அகத்தியர் இரத்தினச் சுருக்கம், அகத்தியர் பரிபூரணம் 400, அகத்தியர் வைத்திய சிந்தாமணி, அகத்தியர் பரிபாசைத்திரட்டு, அகத்தியர் இரண வைத்தியம், அகத்தியர் மூலிகை அகராதி, அகத்தியர் செந்தூரம், அகத்தியர் ஆயிரத்தி ஐந்நூறு, அகத்தியர் விட ஆருடம், அகத்தியர் விட வைத்திய சிந்தாமணி, அகத்தியர் கற்பம், அகத்தியர் நாடி நூல், அகத்தியர் வர்மநூல், அகத்தியர் முப்புக் குரு, அகத்தியர் நயன விதி, அகத்தியர் மணிமந்திர அவிழ்தம், அகத்தியர் வைத்திய சதகம், ஆகியவை அவற்றுள் பிரபல மானவை.


அகத்தியரின் மைத்துனராகிய புலத்தியரெ அவரது முதல் மருத்துவ மாணாக்கராவார். உலகில் பல நூற்றுக் கணக்கான தமிழ்ச் சித்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். உலக நடவடிக்கைகளிலும் சித்தர்களுக்கும் பதினென் சித்தர் குழாமே உயர்பீடமாக இருந்துள்ளது. இவர்கள் பல்வேறு கலைகளிலும் தேர்ச்சியும் சித்தியும் உடையவர்கள். காலத்திற்குக் காலம் வெவ்வேறு சித்தர்கள் பதினென் சித்தர் குழாத்தில் உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் இருந்துள்ளார்கள். இவ்வாறுள்ள சித்தர் பாரம்பரியத்தினை உருவாக்கியவரும் அகத்தியச் சித்தரே. அகத்தியரை எல்லாச் சித்தர்களும் மகா சித்தராகவும் தங்கள் தலைவராகவும் போற்றியுள்ளார்கள். புலத்தியர் (பொலநறுவா) கோரக்கர் (திரிகோணமலை) சிகண்டி (சித்தாண்டி) போகர் (கதிர்காமம்) இராவணன் (இலங்காபுரி) சூத முனி (கைலாயம்) இடைக்காட்டுச் சித்தர் (இடைக்காடு) ஜமதக்கினி (கீரிமலை) காசிபர் விச்சிரபசு (முக்கூடல் நகர் ) மயில் இராவணன் (பாதாள மலை) சித்தர் (சித்தன் கேணி) சித்தானைக் குட்டி சுவாமி (காரைதீவு) ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களில் முதன்மை வாய்ந்தவர்கள். இவர்களில் பலர் அகத்தியரின் மாணாக்கர்கள். காலங்கி நாதர் கமலமுனி, சுந்தரானந்தர், தேரர், உரோம ரிசி, இராம தேவர், திருமூலர், கபிலர், பூணைக் கண்ணர், யாக்கோபு ஆகியோர் உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த அகத்தியரின் மாணாக்கர்களாவர்.

திருக்கைலாய மலையிலிருந்து சிவன் பார்வதிக்கும் நந்திக்கும் அகத்தியரிற்கும் மருத்துவக் கலையைத் திருவாய் மலர்ந்தருளினார். இதனால் இறைவனுக்கு வைத்தியநாதன், வைத்தீசன், வைத்தீசுவரர் என்ற பெயர்கள் ஏற்படலாயிற்று. கைலாய மலையில் அகத்தியர், புலத்தியர் இடம் பெற்றனர். தமிழரின் மருத்துவக் கலையை வளர்த்து விரிவாக்கி நூல்கள் இயற்றி ஆவணப் படுத்திய பெருமை அகத்தியரையே சாரும் எனலாம்.

காலாங்கிநாதர் மயன் சந்ததியில் தோன்றியவர். போகர் விசுவகர்மாவின் மகனாப் பிறந்தவர். கருவூரார் மயன் பெற்ற பிள்ளை சட்ட முனி இலங்கையிற் பிறந்தவர். யூகிமுனி இலங்கையைச் சேர்ந்தவர். மயன், விசுவகர்மா இருவரும்



**திருமங்கலாய் லிங்கம்**



**திருமங்கலாய் காண்டாமணி**
**பெயர் விபரம் பொறிக்கப்பட்டுள்ளது.**



சகோதரர்கள் மட்டுமல்ல மாதோட்டநகர் ராசதானியை பலவருடங்கள் ஆட்சிசெய்த நாகவம்ச அரசர்களாவர். இராவணனின், குபேரனின் மாமனார்களாவர்.

சித்தர்கள் தமது இலக்கியங்களில் குழூஉக்குறிகளைப் பயன்படுத்தினார்கள். அவை நேரடியாக ஒரு கருத்தும், வேறு உட்பொருளும் கொண்டவையாகும். அவர்களாகத் தெரியப்படுத்தினாலன்றி பிறரால் தாமாக விளங்கிக் கொள்ள முடியாதவையாகும். தமது மாணாக்கர்களுக்கு மட்டுமே இவற்றைத் தெரிவித்தார்கள். உலக நன்மைக்காகவும் மக்களின் பாதுகாப்புக்காவும், துட்டர்களின் கையில் தமது கண்டு பிடிப்புக்கள் சேரக் கூடாது என்பதற்காகவுமே குழூஉக் குறியைப் பயன்படுத்தியுள்ளார்களென எண்ணத் தோன்றுகிறது. ஒவ்வொரு சித்தரும் தமது கண்டு பிடிப்புக்களாலேயே பெயர் பெற்று இருக்கின்றார்கள். அவருடைய இயற்பெயர் நமக்குத் தெரியவில்லை. உடலமைப்பு, ஆத்மா பற்றிய அறிவு, இரசாயனவியல், பௌதீகம், நோயியல், நோயறி முறைமை, மூலிகை ஆகியவற்றை முதலில் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் தமிழ்ச் சித்தர்களே.

## மருத்துவ விஞ்ஞானம்

அகத்தியரால் அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவ விஞ்ஞானம் தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும். உலகில் உள்ள எல்லாப் பொருட்களும் ஐந்து பருப்பொருட்களால் அமைந்துள்ளதுபோல உடலும் உடற் தாதுக்களும் உயிர்த் தாதுக்களும் உறுப்புக்களும் புலன்கள் பொறிகளும் உட்கருவிகளும் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வுடலானது தொண்ணூற்றாறு அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இருபத்தினான்கு கோட்பாடுகள் ஆன்மாவைப் பற்றி அமைந்தவையாகும். உடலமைப்பு உடற் தொழில் என்பவற்றைத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

தேகங்களை வாத பித்த கப தாதுக்களின் ஆதிக்கத்தினால் தனித் தனியாக மூன்றாகவும் கலப்புத் தேகங்களை தனித் தனிச் சேர்க்கைகளினால் ஆறாகவும் கண்டுள்ளனர். வாத பித்த கப தாதுக்கள் மூன்றும் தத்தம் அளவுகளிலே தத்தம் நிலையில் இருந்தால் சுக நிலையாகும். அவை மிகினும் குறையினும் நோய் செய்யும். பிணிகளை உடற் பிணி, உளப்பிணி என இருவகையாகப் பிரித்துள்ளனர். பிணிகள் மொத்தமாக நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு ஆகும். பிணிகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து வேறுபடுத்தியுள்ளமையை அறியலாம். உதாரணமாக வெப்பு நோயை அறுபத்து நான்கு விதமாக வகுத்துள்ளனர்.

பிணி அறி முறைமை நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. நோய்களை விழிகளினால் பார்த்தும், தொட்டும், நோயாளிகளிடம் கேள்விகள் கேட்டும் நோய்களை ஏனையோர் அறிந்தனர். சித்தர்கள் நாடி பார்த்தல், தொட்டறிதல், நாக்கு, உடல் நிறம், மொழி, விழி, மலம், சிறுநீர் ஆகிய எட்டு வித பரீட்சைகளினாலும் நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு வியாதிகளையும் கண்டறிந்தனர். மேலும் மலம், சிறுநீர், விந்து, எச்சில் ஆகியவைகளை ஆய்வு முறையில் பரிசோதனை செய்தும் நோய்களை நிதானித்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய சிகிச்சை முறை மணிமந்திர அவிழ்தம் என மூன்றாகும். இதில் மணி என்பது இறைவன், அருள், இரச மணி, நவமணி, என்ற பொருள் கொண்டதாகும். மருத்துவம் கற்று முடிந்த பின்னர் அதில் சித்தி பெறவேண்டி தொழிலை ஆரம்பிக்கு முன்னர் சிவனின் கருணையைப் பெற்றுக்கொள்வதற்காக இரசத்தில் இலிங்கம் செய்து பூசிப்பதால் அந்த இலிங்கமே மணி என்று சித்தர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. மந்திரம் என்பது மனத் திறம், மன் திறம் எனப் பொருள்படும். மனமது செவ்வையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என ஆன்றோர் இதனைக் கூறியுள்ளனர். மனத்தை ஒருமுகப்படுத்திக் கூறும் வார்த்தைகள் மந்திரமாகும். நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழிதானே மந்திரம் என்ப என்று சான்றோர் தெரிவித்துள்ளனர். உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆத்மாவிற்கும் ஏற்படும் துன்பம் பிணியாகும். பிணியை அவிழ்ப்பது அவிழ்தம் ஆகும்.

மருத்துவம் நான்கு கால்களைக் கொண்டு அமைந்தது. அவையாவன மருத்துவன், பரிசாரகன், மருந்து, பிணியாளி ஆகும். சிகிச்சை நல்ல பலன் அளிக்க வேண்டுமானால் மருத்துவன் பரிசாரகன் மருந்து பிணியாளி எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அறிவுறுத்தியுள்ளார்கள். நோய்களை வராது தடுப்பதற்காக செய்யப்படுகின்ற மருத்துவம் காப்பு என்றும், நோய் வந்தால் அதனை நீக்குவதற்காகச் செய்யப்படுகின்ற மருந்து நீக்கம் என்றும், நோய்கள் ஏற்பட்டதனாலோ அல்லது வேறு காரணங்களினாலோ உடலிற் தோன்றும் இழப்புக்களை ஈடு செய்து மீண்டும் நிரப்புவது! நிறைப்பு என்றும் நோக்கங்களினால் மூன்று பிரிவாகும். மூலிகைகளினால் செய்யப்படுகின்ற சிகிச்சைகள் மானிட சிகிச்சை எனப்படும். லோக, தாது, பற்பங்களினால் அளிக்கப்படும் சிகிச்சையை தேவ சிகிச்சை என அழைத்தார்கள். கத்தி முதலிய கருவிகள் கொண்டு இயற்றப்படும் அறுவை ஆதிய சிகிச்சைகள் இராக்கத சிகிச்சை என்றும் சித்தர்கள் கூறினார்கள்.

வெளியிலிருந்து உடலில் ஏற்படும் காயங்கள் அறுநூறு வகைப்படும். அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நோய்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய காலம், ஒழுங்கு, கருவிகள், விறைக்கச் செய்யும் வழிமுறைகள், அறுவைச் சிகிச்சையின் பின் கவனிப்பு எல்லாம் விபரமாக இருந்துள்ளன. அறுவைச் சிகிச்சை முறையில் தேர்ச்சி பெற்றவரை தேரர் என அழைத்தனர். அறுவைச் சிகிச்சையின்போது வேதனை தோன்றாமல் இருப்பதற்கு மூலிகைகளையும், வர்மச் சிகிச்சை முறையையும் பயன் படுத்தினார்கள். மனிதனுடைய ஒரு உறுப்புச் சிதைந்தால் மற்றோர் உறுப்பை பதியவைத்துப் பொருத்தமுடியும் என்பதை முதன் முதலில் நிகழ்த்திக் காட்டியவர் அகத்தியர்.

அகத்தியர் நயனவிதி என்ற நூலில் கண்ணில் தோன்றும் காசம் (Cataract) நோய்பற்றியும் அதனை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கும் முறைகளும் கண்நோய்களில் பயன்படுத்தும் இருபத்தியெட்டு கண் அறுவை சிகிச்சைக் கருவிகள் பற்றிய விபரங்களும் காணப்படுகின்றன. கண் அறுவையில் தமிழர்கள் பெற்றிருந்த ஆற்றலையும் திறமைகளை எடுத்துக் காட்டுவதற்காக அமைந்துள்ளது. மேனாட்டு விஞ்ஞானிகளினால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூளை அறுவைச் சிகிச்சை முறையையும் அகத்தியர் செய்த வரலாறு காணப்படுகின்றன. தலை எலும்புகளை அறுத்துத்திறந்து மூளையில் சிகிச்சையளிப்பது என்பது இலேசான விடயமல்ல. மூளை அணுக்கள் சிதைவடையாமலும், நிலைகுலையாமலும் நிகழ்த்திக் காட்டியவர் அகத்திய மகா சித்தர்.



கேலன் என்ற மன்னனின் மனைவி விச்பலா கணவன் யுத்தத்திற்குச் சென்றபோது கணவனுடன் தானும் சென்று எதிரிகளை எதிர்த்துப் போரிட்டாள். அப்பொழுது எதிரிகளின் ஆயுதங்களினால் அவளுடைய கால் ஒன்று ஒடிந்தது. அவளுக்கு இரும்பினாலான காலைப் பொருத்தி இணையச் செய்தார் அகத்தியர் என்ற வரலாறு இருக்கு வேதத்தில் காணப்படுகின்றது. (118-08). இந்தக் குறிப்பிலிருந்து அகத்தியர் இருக்கு வேத காலத்திற்கு முற்பட்டவர் என்பதையும், அவர் இரும்பின் உபயோகத்தை அறிந்திருந்தார் என்பதையும், நவீன விஞ்ஞான காலத்திற்கு ஆயிரக்கணக்கான ஆண்டு காலத்திற்க முன்னரே மனிதர்களுக்கு செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் முறையை கையாண்டு இருந்தார் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழர்களின் மருத்துவ விஞ்ஞானம் அக்காலத்தில் உச்ச நிலையில் இருந்திருத்தல் வேண்டும் என்பதனை இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

உடலில் நோய்கள் தோன்றும்போது காணப்படும் குணம் குறிகளைத் தோற்றுவிக்கும் மருந்துகள் ஒப்புறை ஆகும். நோய்களில் காணும் குணம் குறிகளுக்கு எதிரான தன்மையுள்ள மருந்துகள் எதிருறையாம். இருவிதமான செய்கைகளையுமுடைய மருந்துகளைக் கலப்புறை எனவும் அழைத்தார்கள். மருந்துகள் பாவிக்கப்படும் முறையைக்கொண்டு உள் மருந்துகள், வெளி மருந்துகள் என இரு வகையாகும். உள்ளுக்குக் குடிப்பதற்குக் கொடுக்கப்படும் மருந்துகள் முப்பத்திரண்டு வகைகள் ஆகும். அது போன்று வெளிப் பாவிப்பு மருந்துகளும் முப்பத்திரண்டு வகைகளாகும்.

மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருட்களாகப் பயன்படுகின்ற பதார்த்தங்கள், மூலிகைகள் - 1008, பிராணிப் பொருட்கள் - 118, காரசாரம் - 25, உலோகம் - 09, இரச வர்க்கம் - 08, தாது நஞ்சு - 64, உப ரசம் - 120, மணிகள் - 09, ஆகியவையாகும்.

இன்பமாக வாழ்வதற்கும் இளமையை அனுபவிப்பதற்கும் இசைவை உண்டு பண்ணுவதற்காகவும் செய்யப்படுவது வசீகர சிகிச்சையாகும். உடல் முதுமையை அடையாமற் தடுத்து எப்பொழுதும் இளமையோடு இருக்க வேண்டிச் செய்வது இரசாயன சிகிச்சையாகும். விடங்களிலிருந்து மானிடரைக்காக்கும் சிகிச்சை நஞ்சு நூலில் காணப்படும். கண்ணில் வரும் நோய்களையும் அதற்குரிய சிகிச்சை முறைகளையும் விவரிப்பது நயன விதி என்றழைக்கப்படும். மனிதன் இறந்த பின்னர் அவன் ஏன், எப்பொழுது, எவ்வாறு இறந்தான் என்ற விபரங்களைக் கூறுவது அகால மரண நூல் எனப்படும். மனிதன் இறந்த பின்னர் உடல் அழுகிச் சிதைவுற்று அழிந்து விடும். உடல் சிதைவுற்று அழிவதனாலும் இறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றது. இந்த உடலை சிதைவுற்று அழிவடையாது காப்பது காயகல்ப சிகிச்சை மருந்துகளாகும். காயகல்ப மருந்துகளைப் பாவித்துச் செய்கின்ற சிகிச்சை காய கல்ப சிகிச்சை எனப்படும். இதனை உண்பதனால் சித்தர்களின் உடலானது காற்று நீர் நெருப்பினாலோ வேறு தாக்கங்களினாலோ அழிவடைவதில்லையாம். உலகினைக் காக்க வந்த உத்தமர்களே சித்தர்கள். அவர்கள் மனித சமுதாயத்தைக் காப்பாற்றுவற்காகப் பொன்னைப் பயன்படுத்தினார்கள். சித்தர்கள் பொன்னை ஆண்டவனிடமோ அரசர்களிடமோ யாசித்துப் பெற்றுக்கொள்வதில்லை. தமது சித்துக்களின் ஆற்றல்களினால் செம்பு இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக மாற்றி மனித சமுதாயத்திற்கு அதனைக்கொண்டு தொண்டு செய்தார்கள். தமக்காக பயன்படுத்தி வாழவுமில்லை. அதனால் தாம் வாழவுமில்லை பிறருக்காக வாழ்ந்த அந்தணர்களாவர்.

## சோதிடக்கலை

சோதியாகிய சூரியனிடமிருந்து வந்ததால் சூரியனையே ஆதியாகக் கொண்டு கூறப்பட்டதால் சோதிடம் எனப்பட்டது. சோதிடம் ஐந்து வகையாகும். சோதிடம் மருத்துவத்துடன் இணைந்த கலை என்பதாலேயே பண்டிதர்கள் மருத்துவத்துடன் சோதிடத்தையும் கற்க வேண்டுமென தெரிவித்துள்ளார். சோதிடத்தில் மருத்துவ சோதிடம் என்றும் ஒரு பிரிவு காணப்படுகிறது. அதில் நோய்களைப்பற்றியும் சிகிச்சைப்பற்றியும் அதற்குரிய கிரக அமைப்புக்கள் பற்றியும் காணப்படுகின்றது. சிவனும் முருகனும் நந்தியும் சோதிடத்தை உலகிற்கு அருளியவர்கள். பதினென் சித்தர்களே சோதிடக் கலையை வளர்த்து உருவாக்கியவர்கள். அகத்தியருடைய நாடி சோதிடம், காண்டம், குரு வாக்கியம், சோதிடக் கலையில் சிறப்பு மிக்க நூல்களாகும். சித்தர்கள் சோதிடக் கலையின் நாயகர்களான நவக்கிரகங்களையே உலக நன்மைக்காக கட்டிப்போட்ட வரலாறுகளும் உண்டு. இடைக்காட்டுச் சித்தர் அகத்தியரின் மாணாக்கர்களில் ஒருவர். அவர் நவக்கிரகங்களின் ஓட்டத்தைக் கட்டிப்போட்டார் என்பதை "இடைக்காட்டுச் சித்தன் கெடுத்தானே கெடுத்தான் கொட்டணைப் பாலாலே" என்ற வாக்கியம் தெரிவிக்கின்றது. அகத்தியரின் இன்னுமொரு மாணாக்கரான இலங்கேசன் நவக்கிரகங்களைக் கட்டிப்போட்டவர். அகத்தியருடைய பல மருத்துவ நூல்களில் சோதிடம் விரிவாக எடுத்தாளப்பட்டுள்ளது. மிகவும் பிரபலமான சப்த ரிசி வாக்கியம் நந்தி வாக்கியம் என்பவை சோதிட நூல்களே. அகத்தியர் சப்த ரிசிகளுள் ஒருவர் ஆவர். சோதிடக் கலையில் ஆண்டுகள் அறுபது, சதுர் யுகம் அறுபது ஆயிரம் ஆண்டுகளாகும். கிருதா யுகம் 16, 800 ஆண்டுகள், திரேதா யுகம் 15, 600 ஆண்டுகள், துவாபர யுகம் 14, 400 ஆண்டுகள், கலி யுகம் 13, 200 ஆண்டுகள் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றது. இந்த தமிழ்ச் சோதிடக் கணக்கின்படி புரான இதிகாசங்களின் காலக் கணிப்புக்களும் ஒன்றாகப் பொருந்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

## உலக நாகரிகத்தின் சிற்பி

துணிவும் நெடு நோக்கும் தொண்டாற்றும் பான்மையும் வாய்ந்த அகத்தியன் தமிழ்ப் பண்பாட்டையும் கலைகளையும் யாவா, சுமாத்திரா, சீயம், காம்கோஜம்



இந்துசீனம் (இந்தோனேசியா), இந்தியா, அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய பல உலக நாடுகளிலும் சென்று பரப்பினார். உயிருக்கு துணிந்து பண்பாட்டையும் தமிழ்க் கலைகளையும் பரப்பும் பெரு நோக்குடன் கடுமையான நீண்ட நெடிய யாத்திரை செய்த முதல் யாத்திரிகர் அகத்தியர். அவர் வெறுமனே யாத்திரை செல்லவில்லை. தாம் சென்ற நாடுகளிலெல்லாம் பல்லாண்டுகள் தங்கியிருந்து தமிழ்ப் பண்பாட்டையும் கலைகளையும் திராவிட நாகரிகத்தினையும் வளர்த்தவர். அந்தந்த நாட்டிலேயே மாணவர்களைச் சேர்த்துத் தமிழ்க் கலைகளைக் கற்பித்து தமது வாரிசுகளாக உருவாக்கினார். பின் அந்த நாட்டைவிட்டு அடுத்த நாட்டிற்குச் சென்றார். அவருடைய மாணவர்கள் அகத்தியரின் பணிகளைத் தமது நாடுகளில் தொடர்ந்து செய்து வந்துள்ளார்கள். கடல் கோள் அழிவின்போது அவர் பிறிதொரு நாட்டிற்கு குடத்துள் அமர்ந்து சென்றதாக வரலாறு உணர்த்துகின்றது. இக்காரணத்திலேயே அவரை இந்தியாவில் குட முனி என்றும் கும்ப முனி என்றும் அழைக்கலானார்கள்.

உலகில் தோன்றிய நாகரிகங்கள் பலவற்றுள்ளும் காலத்தால் மிகவும் தொன்மையானது கங்கைவெளி நாகரிகமாகும். அதனோடு இணைந்த இலங்காபுரி நாகரிகத்தினை வால்மீகி முனிவரும் கம்ப நாடரும் உலகத்திற்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். அகத்தியருடைய வழிகாட்டலில் இலங்காபுரியை அமைத்தவன் குபேரன் எனும் மன்னன் ஆவான். இலங்கேசன் குபேரனை வென்று துரத்திவிட்டு விரைவிலேயே இலங்காபுரிக்கு அதிபதியானான். ஈரேழு பதினான்கு உலகங்களிலும் இலங்காபுரிக்கு ஒப்பான ஈடான நகரம் அமைந்திருக்கவில்லை. வால்மீகி முனிவர் இராமாயணத்தில் இலங்காபுரியைப் பற்றிய பகுதிக்கு சுந்தர காண்டம் என்று குறிப்பிட்டதிலிருந்தே இலங்காபுரியின் அழகுக்கும் சிறப்புக்கும் அவர் அளித்த முதன்மை உணரப்படுகின்றது. இலங்காபுரியை அறிந்திருக்காததனாலே புலவர்கள் சிறப்புக்களுக்கு அமராவதியையும் அழகாபுரியையும் தெரிவிக்கின்றனர். அவற்றை விடவும் இலங்காபுரி அதி சிறந்த நகர் என்றார். பளிங்கு மாளிகைகளையும் வீடுகளின் வரிசையான அமைப்பும் நகரினைச் சுற்றி மதில்களும் நகரின் மத்தியில் அரச மாளிகை ஒப்பில்லாத மணிகள் இழைக்கப்பட்டிருந்தன. அரண்மனை மதிலில் கால இயந்திரங்கள் (கடிகாரங்கள்) பொருத்தப்பட்டிருந்தன. உலகின் செல்வமெல்லாம் இலங்கை நகரில் குவிந்து ஐசுவரியத்தின் உச்ச நிலை காணப்பட்டது. களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் இல்லை. பூங்காக்கள் சிங்காரத் தோட்டங்கள் நகரவாசிகளின் அழகுப் பண்புக்கு அறிகுறிகளாயின. கோட்டையின் நடுவில் சிவாலயம் அமைந்திருந்தது. கோட்டைக்கு வெளியே சோகத்தை மறக்க வைக்கும் அசோக வனம் அமைந்திருந்தது. சுக போகத்தை நாடுவோருக்கு அதற்கேற்ற உணர்ச்சியை ஊட்ட வல்லது. இயற்கையின் வனப்பும் வல்லமையும் பூங்காவில் திகழ்ந்தன.

பட்டணத்தில் சுகாதாரக் கோட்பாடுகள் மிகப்பொருத்தமாக அமைந்திருந்தன. நகரினைத் துப்பரவாக வைத்திருப்பதில் நகரவாசிகள் பயிற்சி பெற்றிருந்தனர். தெய்வமயமான இலங்கை நகர் சுவர்க்கம் போலக் காட்சி அளித்தது என்கிறார் வால்மீகி. மக்கள் ஆனந்த மயமாக பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்தனர். பக்தி இசை ஓர்பால் மனச் சாந்தியைக் கொடுத்தது. சில இடங்களில் இன்னிசையை இராக தாள ஒழுங்குகளோடு நன்கு ரசிக்கத் தக்கதாக சிறந்த பாங்கிலே இசை வல்லுநர்கள் இசைத்தார்கள். வீணை யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளம் மத்தளம் குழல் முதலிய இசைக்கருவிகளின் ஒலியும் செவிக்கின்பத்தை அளித்தது. மக்கள் அழகாக உடையணிந்து கவர்ச்சிகரமான நடை உடை பாவனைகளைக் கொண்டிருந்தனர்.

அரசாட்சியின் சிறப்புக்களை வர்ணிக்கையில் இலங்கேசன் ஆட்சி முறையில் ஒப்பற்றவன், திட்பமும் மனத் தெளிவும் வாய்க்கப் பெற்ற மந்திரிமாரின் பொருத்தமான தலைவன், வல்லமையே வடிவெடுத்த சேனாதிபதிகளுக்கு இறைவனாக இலங்கினான். தெய்வேந்திரனையே இராஜ ரீதியில் தோற்கடித்தவன். இலங்காபுரி வேந்தன் வியப்புக்குரிய ஒரு மூர்த்தியாவான். தகைமைகள் பல அவனிடம் திகழ்ந்து கொண்டிருந்தன. தங்கத்தினால் இழைக்கப்பெற்ற விமானத்தில் புறப்பட்டு அரசவைக் கூட்டத்திற்கு வந்தான். மிகப்பெரும் மண்டபத்தில் ராஜசபை கூடியது. மந்திரிகள் பிரதானிகள் தத்தம் தகுதிக்கேற்ப ஆசனங்களில் அமர்ந்தனர். ஒழுங்குப்பாட்டுடன் நடந்து கொள்வதில் தேர்ச்சிபெற்ற இலங்கேசன் பண்பாட்டில் மேலோன், பராக்கிரமத்தின் வடிவமாகும். இந்த வர்ணனை இந்தியர்களால் தெரிவிக்கப்பட்டவையாகும். எனவே இதில் மிகைப்படுத்தல் இல்லை எனலாம். புலத்தியரின் பேரனான குபேரன் ஈழத்தை விட்டகன்று அயோத்திக்கு வடக்கே இமய மலையில் குல குரு அகத்தியரின் வழிகாட்டலில் அழகாபுரி என்ற நகரையும், அரசாட்சியினையும் அமைத்தான். திராவிட நாகரிகம் அங்கேயும் சிறப்புடன் விளங்கியது. இந்தியக்கவிகள் சிறப்புக்கு அழகாபுரியை ஒப்பிடுவது வழக்கம். செல்வத்திற்கு அதிபதியான குபேரன் இமய மலையில் நிகழ்ந்த முதலாவது திராவிடக் குடியேற்றம் எனலாம்.

இராமாயண காலத்திலேயே இமயமலைப் பகுதிகளில் திராவிட நாகரிகப் பரம்பல் ஏற்பட்டிருந்ததை இதனால் அறிய முடிகிறது. வட இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய மொகஞ்சதாரோ, கரப்பா நாகரிகங்களும் திராவிட நாகரிகங்களென நவீன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அழகாபுரி நாகரிகத்தினை அடியொற்றியே இவை தோன்றியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

குமரி கண்டத்தில் இடம் பெற்ற கூடல் நகர் நாகரிகம் இற்றைக்குப் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. பாண்டிய மன்னர்கள் அகத்தியருடைய தலைமையில் கூடல் நகரில் நாகரிகத்தினை வளர்த்தார்கள். முதலாவது தமிழ்ச் சங்கத்தை அமைத்து ஐயாயிரம் ஆண்டுகள் வரை தமிழ்க் கலைகளையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வளர்த்தார்கள். புலவர்கள் அறிஞர்கள் பண்டிதர்கள் ஒன்று கூடிய நகர் கூடல் நகர் ஆயிற்று. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய அக வாழ்வு பற்றியும் புற வாழ்வு பற்றியும் பல நூல்கள் எழுந்தன. தமிழர் ஆட்சி முறை, நீதி முறை, பற்றிப் பல இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. தமிழர் மருத்துவத்தின் சிறப்பினை உணர்த்தும் வகையில் ஏலாதி, திரிகடுகம், சிறு பஞ்ச மூலம் என மருத்துவப் பெயர்கள் தமிழ் இலக்கியங்களுக்கு வழங்கப்படலாயிற்று. மேலே குறிப்பிட்ட மூன்று நாகரிகங்களும் அகத்தியருடைய நாடு நகர நிர்மாண சிறப்புக்களுக்கு தகுந்த சான்றுகளாகும். தென் இந்தியாவுடன் தெற்கே நீண்டிருந்த முனை வடிவமான ஒரு சிறு நிலப் பரப்பே குமரி கண்டமாகும்.



இலெமூரியாக கண்டம் அழிவு படத் தொடங்கியதும் அகத்தியர் தமது தலைமையில் திராவிடர்களை யாவா, கம்போடியா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் சென்றார். இலெமூரியன்களே சித்தர்களின் வழிகாட்டல்களின் கீழ் வடக்கு, தெற்கு அமெரிக்காவிலும் குடியேறினார்கள் என்பது மட்டுமல்ல நைல்நதிப் பள்ளத்தாக்கிலும் குடியேறி அங்கே எகிப்திய நாகரிகத்தினையும் உருவாக்கினார்கள் என்று லொஸ் ஏன்ஜலிசைச் சேர்ந்த மார்சல் கோவிந்தன் ஆங்கிலத்தில் எழுதிய பாவாஜியும் பதினென் சித்தர் பாரம்பரியமும் என்ற ஆய்வு நூலில் தெரிவித்துள்ளார். அகத்தியர் இந்தியாவிலிருந்து செல்லவில்லை. அழிவு பட்ட இலெமூரியாவிலிருந்தே சென்று இருக்கின்றார். அங்கிருந்துதான் சித்தர்களையும் திராவிடர்களையும் அழைத்துச் சென்று உலக நாடுகளில் குடியேற்றித் திராவிட நாகரிகத்தினைப் பரப்பியுள்ளார் எனலாம். அகத்தியர் இந்தியாவில் குடியேற்றிய வரலாற்றை முன்பு பார்த்தோம். பூனைக் கண்ணர் என்ற சித்தர் அகத்தியர் குழாத்தில் காணப்படுகின்றார். இவர் ஐரோப்பாவை அல்லது எகிப்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

இலெமூரியாக் கண்டம் என்பது பண்டைய ஈழ மண்டலமே ஆகும். அழிந்து போன ஈழ மண்டலத்தின் எஞ்சிய நிலப்பரப்பே ஈழம் என்றும், இலங்கை என்றும் அழைக்கப்படும் நமது நாடாகும். ஈழ மண்டலம் நாற்பத்தொன்பது நாடுகளைக் கொண்ட கண்டமாகும். அது இன்றைய ஈழத்துடன் இணைந்திருந்த பெருநிலப்பரப்பாகும். குமரி கண்டம் தென் இந்தியாவுடன் இணைந்திருந்த ஏழு நாடுகளைக் கொண்ட சிறு நிலப்பரப்பாகும். சிலர் இலெமூரியாவையும் குமரி கண்டத்தினையும் ஒன்றாகக் கருதுவது பொருத்தமற்றதாகும். இரண்டும் இரு வேறு கண்டங்களாகும். இந்தியாவில் அகத்தியர் குடியேற்றிய வரலாறு தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியாரினால் எடுத்தாளப்பட்டுள்ளது. அகத்தியர் அங்கே காடுகளை அழித்து நாடாக்கியதையும் திருமாலின் குலத்தினரான பதினெட்டு மன்னர்களையும், சிற்றரசர்களான வேளிர்களையும், பதினெண்குடிகயையும், அங்கே குடியேற்றினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சலப்பிரளயத்தின் போது குடத்திற்குள் இருந்து தப்பித்து இந்தியா சென்றார். அதனால் குடமுனி, கும்பமுனி என்ற பெயருண்டாயிற்று.

அகத்தியர் குற்றாலத்தில் வாழ்ந்த காலத்தில் விதர்ப்ப நாட்டு அரசனின் மகள் அனுசூயாவை மணஞ்செய்து நாகரிகத்தை ஏற்படுத்திய வரலாற்றினை முன்னர் பார்த்தோம். குமரி கண்டத்திற்கும் இலெமூரியாக் கண்டத்திற்கும் வாயிலாக இருந்த நகரம் கபாடபுரமாகும். கபாட புர நாகரிகம் தமிழர்களின் வரலாற்றினைக் கூறும் ஓர் உயர்ந்த நாகரிகமாகும். கபாட புர நாகரிகம் தோன்றுவதற்கும் அங்கே இரண்டாவது தமிழ்ச் சங்கம் நடப்பதற்கும் அகத்தியரின் சேவையே காரணம் எனலாம். இற்றைக்கு மூவாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்திய மதுராபுரி நாகரிகத்தையும் மூன்றாவது தமிழ்ச் சங்கத்தினையும் தோற்றுவித்தவர் அவரே.

கம்போடியா, இந்தோனேசியா, யாவா ஆகிய நாடுகளிலும் அகத்தியரின் வரலாற்றுத் தடயங்கள் காணப்படுகின்றன. காம்போஜ நாட்டின் மன்னர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர் அகத்தியர்தான் என்று கூறும் கல்வெட்டுக் காணப்படுகின்றது. அது கி. பி. 889இல் வரையப்பட்டுள்ளது. காம்போஜ நாட்டின் மன்னன் மகள் யசோமதியை அவர் மணந்தார். அவரின் புதல்வனே நரேந்திர வர்மன் என்ற அரசன் என்ற விபரங்களும் கல்வெட்டில் காணப்படுகின்றன. அந்த நாட்டினை சீர் திருத்தி உயர்ந்த நாகரிக நிலைக்கு அகத்தியர் கொண்டு வந்தார் என்பதை இன்னுமொரு கல்வெட்டு எடுத்து இயம்புகின்றது.

அமெரிக்காவில் தமது குழாத்தைச் சேர்ந்த சித்தர்களை அழைத்துச் சென்று குடியேற்றிய விபரங்களை முன்பு பார்த்தோம். அவர்களில் ஒருவரான கபிலர் என்ற சித்தர் வசித்த இடமே கபிலாரணியம் ஆகும். கலிபோர்னியா என்று அழைக்கப்படும் இடமே கபிலாரண்யம் ஆகும். சில வருடங்களுக்கு முன் கலிபோர்ணியாவில் கொலராடோ நதிப் பள்ளத்தாக்கில் நிலத்தின் அடியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதென நவீன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள் என சங்கராச்சாரியார் தெய்வத்தின் குரல் என்ற நூலில் அறிவித்துள்ளார். அகத்தியர் இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்காவில் சிவவழிபாட்டினையும் திராவிட நாகரிகத்தினையும் ஏற்படுத்தியுள்ளமைக்கு இச் சிவன் கோவில் சான்றாகும். உரோமாபுரியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் உரோம ரிசி என்ற சித்தர் பதினென் சித்தர்களில் ஒருவரான அகத்தியரின் சீடராவார். உரோமாபுரி நாகரிகத்திற்கும் இவருக்கும் உள்ள தொடர்புகள் ஆராயப்பட வேண்டியவையாகும். அகத்தியரின் சீடராக இருந்தாலும் இவர் உரோமாபுரியைச் சேர்ந்தவராகவே இருத்தல் வேண்டும்.

அராபிய நாட்டில் வாழ்ந்த யாக்கோபு என்பவர் அகத்தியரின் சீடராகி சித்தர் குழாத்தில் சேர்ந்தவர் ஆவார். தமிழில் பல மருத்துவ நூல்களையும் இயற்றியுள்ளார். இராம தேவர் என்ற சித்தரும் இந்தியாவிற்கு வடமேற்கே வாழ்ந்தவராக கருதப்படுகின்றார். இந்த இருவரையும் சில ஆய்வாளர்கள் ஒருவராகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் சித்தர்களின் பட்டியலில் இரு பெயர்களும் வேறு வேறாகக் காணப்படுகின்றது.

சீனாவில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தியவரான டாவோ என்பவர் பதினென் சித்தர்களில் ஒருவரான போகர் என்று அமெரிக்காவின் யோகி இராமையா தெரிவித்துள்ளார். போகர் அகத்தியர் குழாத்தில் அவரின் துணைச் சித்தர் ஆவார்.

இந்தியாவிலுள்ள நவீன ஆராய்ச்சியாளர்கள் அகத்தியர் இந்தியாவைச் சேர்ந்தவர் அல்ல, அவர் வெளியே இருந்து இந்தியாவிற்குள் வந்தவர் என்று முடிவு செய்துள்ளார்கள். அகத்தியர் கிருதாயுகம், திரேதாயுகம் இரண்டிலும் இலங்கையிலேயே இருந்துள்ளார். இந்தியா சென்றாலும் மீண்டும் வந்து துவாபரயுகத்திலும் இலங்கையிலேயே வாழ்ந்துள்ளார். பின்னர் உலகம் முழுவதும் சுற்றியுள்ளார். கலியுகத்தில் இந்தியாவிலேயே வாழ்ந்துள்ளார் என்றும் காணப்படுகிறது. அவர் கூடுதலான வாழ்நாளை இலங்கையிலேயே கழித்துள்ளார்.




பாரிய கட்டிட எச்சங்கள், இடிபாடுகள், மருத்துவம் செய்வதற்கு பயன்படுத்திய கருங்கல்லிலானான கருவிகள் எல்லாம் அவர் வாழ்ந்ததாக கருதப்படுகிற அகத்திய தாபனத்தில் காணப்படுகின்றன. இவை கங்கைவெளி மக்கள் கி.மு. இருபதினாயிரம் ஆண்டளவில் மனித நாகரிகத்தின் உச்சநிலையில் திகழ்ந்துள்ளர்கள் என்று சான்று பகர்கின்றன. அம்மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் திருக்கரசை மாநகர் சிவன் கோவிலும் திருமங்கலாய் நந்தலிங்க சுவாமி கோவிலும் உலகிற்கு சான்றாக உள்ளன.

குளங்கட்டி ஆற்றைவெட்டி, நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்துள்ளார்கள் என்பதை குளங்களும் ஆறுகளும் தெரிவிக்கின்றன. அகத்தியரின் பாதச்சுவடுகள் கருங்கல்லிலே பொறிக்கப்பட்டு அகத்திய தாபனத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவர் அங்கு வாழ்ந்ததற்குரிய சின்னமாகவே கருதப்படுகிறது. அகத்தியர் ஈழத்தின் முத்தூரைச் சேர்ந்தவர் என்பதையே இவ்வாதாரங்கள் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன எனலாம்.

வணக்கம்

**எனக்கு அறிவைப் புகட்டிய ஐயர் வைத்தியசிரோமணி வ. சிவப்பிரகாசம், விரிவுரையாளர், அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்திய பல்கலைத் தாபனம், கழகம்.

| | | |
|---|---|---|
| தவிசாளர் | : | பண்டிதர் இ. வடிவேல் |
| துணைதவிசாளர் | : | திரு. து. குலவீரசிங்கம் |
| பொது செயலாளர் | : | வைத்தியபேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் |
| துணைப் பொதுச் செயலாளர் | : | திரு. து. தவசிலிங்கம் |
| நிதிச்செயலாளர் | : | திரு. செ. சிவபாதசுந்தரம் |
| துணைநிதி செயலாளர் | : | திரு. த. சித்தி அமரசிங்கம் |
| உறுப்பினர் | : | திருமதி. விஜயகுமாரி தவசிலிங்கம்<br>திருமதி. சாந்தாதேவி சூரியமூர்த்தி<br>திருமதி. சித்தி பத்மநாதன்<br>வைத்தியகலாநிதி (திருமதி) செ. சரோஜினிதேவி<br>திரு. சோமசுந்தரம் J.P |
| ஆவண காப்பாளர் | : | திரு. கா. சிறிஸ்கந்தராசா |

## உசாத்துணை நூல்கள்

- 🕮 கம்பராமாயணம்
- 🕮 கந்தபுராணம்
- 🕮 தட்சண சைலாசபுராணம்
- 🕮 தட்சண கைலாசமான்மியம்
- 🕮 திருக்கரசைப் புராணம்
- 🕮 கல்கி தீபாவளி மலர் 1958. வை. நரசிம்மன் கட்டுரை
- 🕮 செந்தமிழ் - சஞ்சிகைகள்
- 🕮 பூம்பொழில் சஞ்சிகைகள்
- 🕮 நாம் தமிழர்
- 🕮 போகர் 7000
- 🕮 தெய்வத்தின் குரல்
- 🕮 அகத்தியர் நூல்கள்




+ அகத்தியதாபன இடிபாடுகள் உள்ள இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு

# அன்னை சாரதா மகளிர் இல்லம்

## மூதூர்

## 2001

உதயன் பிரின்டஸ், திருகோணமலை - தெ.ப. 20783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org